குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 49 | சுக்கில ஆண்டு கார்த்திகைத்திங்கள் 10-12-89 [இதழ் 1

20344

திருவாதிரைத் திருவிழா

10-1-90

கற்பனை கடந்த சோதி கருணையே உருவம் ஆகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமம் ஆகும் திருச்சிற்றம் பலத்துள் மேவி
பொற்புடன் நடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி! போற்றி!

— பெரியபுராணம் - தில்லைவாழ் அந்தணர் புராணம்.

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 49 | 10-12-89 | இதழ் !

உட்பொருள்

எண்		பக்கம்
1	மக்கள் நலம்பெறக் காத்திருக்கிறார்கள்!	1
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை	6
3	திருவூடல்	13
4	உவகையில் தோன்றும் உலகு!	17
5	எது கோபம்?	18
6	வேதம் குறிப்பிடும் ஸரஸ்வதி நதி உண்மையே!	21
7	மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள்	23
8	போதமும் சித்தியும்	27
9	அபிடேக பலன்	30
10	ஸ்ரீ ஞானசம்பந்த விநாயகர் பதிகம்	36
11	கணம்புல்லர்	38
12	செய்திகள்	42
13	எதிர்காலம்	45
14	இதழ்வழிச் சைவசமயக் கல்வி V பாடம்-10	49

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

சிற்றின்பம் பேரின்பம்
சிவகுண மென்றனை நீ
உற்றின் பிரண்டு
முணர்ந்திலையோ—சிற்றின்பம்
நாடிற் கருமபல
நாதனுருப் பேரின்பம்
நீடிப் படிகம்போல் நீ.

— முத்திநிச்சயம் 5

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 49 ★ இதழ் 1

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

சுக்கில - கார்த்திகை - 10—12—1989.

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலாலவாயிலாய்!
நின்தயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

மக்கள் நலம்பெறக் காத்திருக்கிறார்கள்!

புதிய அரசுக்கு வாழ்த்து :

இந்தியாவின் ஒன்பதாவது பாராளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்து, மத்திய அரசில், தேசிய முன்னணி அரசு பொறுப்பேற்றுள்ளது எந்த ஒரு கட்சிக்கும், மத்தியில் ஆட்சி அமைப்பதற்குப் போதுமான அறுதிப் பெரும்பான்மையை இந்திய வாக்காளர்கள் இம்முறை வழங்கவில்லை. அதிகமான இடங்களில், இரண்டாவதாக வெற்றிபெற்ற தேசிய முன்னணி, பாரதிய ஜனதா, சில இடதுசாரிக்கட்சிகள் ஆகியவற்றின் துணையோடு ஆட்சி அமைக்க முன்வந்தது. அதிகமான இடங்களைப் பெற்ற இந்திரா காங்கிரஸ் அரசு அமைப்பதில் ஆர்வம் காட்டாத நிலையில், தேசிய முன்னணியை அரசு அமைக்கக் குடியரசுத் தலைவர் அழைத்துள்ளார். திரு. வி. பி. சிங் அவர்களைப் பிரதமராகக் கொண்ட, நான்கு கட்சிகளின் கூட்டான தேசிய முன்னணி அரசு மத்தியில் பொறுப்பேற்றுள்ளது. புதிய அரசுக்கு ஞானசம்பந்தம் நல்வரவு கூறி வாழ்த்துகிறது.

ஜனநாயகம் வென்றதா? தோற்றதா?

நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள், உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில், ஜனநாயகப் பண்புகள் வேரூன்றி விட்டதை நன்கு எடுத்துக்காட்டுவதாக உலக நாடுகள் பல கருத்துக்கணித்துள்ளன. வேறு பலநாடுகளும், பத்திரிகையாளர்களும் இந்தியாவில் ஜனநாயகக் கட்டமைப்புக் குலைந்து வருவதையே தேர்தல் முடிவுகள் காட்டுவதாக ஆதாரங்காட்டுகின்றன. எந்த ஒரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை அளிக்கத் தவறியமை; தேர்தலில் நாற்பது விழுக்காடு வாக்காளர்கள் வாக்களிக்கத் தவறியமை; தேர்தல் வன்முறைகளில் நூற்றுக்கு மேலானவர்கள் உயிரிழந்தமை; பல நூறு வாக்குச் சாவடிகளில் மறுவாக்குப் பதிவு நிகழ்த்த நேர்ந்தமை; அளவுக்குமீறிய பணபலம் ஆட்சி செய்தமை முதலியன இந்திய நாட்டில் ஜனநாயகக் கட்டமைப்புக்கள் குலைந்து வருகின்றனவோ என்ற ஐயத்தை ஏற்படுத்தவே செய்கின்றன. எதிர்வரும் காலங்களில் மேற்கண்ட குறைபாடுகளை, இந்திய ஜனநாயகம் அகற்றி, வெற்றி கொள்ளும் என்று ஞானசம்பந்தம் நம்புகின்றது. வெற்றி கொள்ள வேண்டும் என்றும் விரும்புகின்றது.

ஒருமித்த உள்ள உணர்வுகள் :

தேர்தல் முடிவுகளில் எந்த ஒரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை என்பதுஉண்மையே. ஆனால், இத்தேர்தல் முடிவுகள், இந்தியவாக்காளர்களிடையே காணப்படும் சில ஒருமித்த உள் உணர்வுகளை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்று பாராது. நல்லாட்சி நடத்தத் தவறியவர்கள் என்று கருதிய எல்லாக் கட்சிகளையுமே அவர்கள் படு தோல்வி அடையச் செய்துள்ளனர். யார் ஆள வேண்டும் என்பதை விட, யார் ஆளக்கூடாது என்பதில் அவர்கள் ஆர்வங்காட்டியிருப்பதாகவே பார்வையாளர்கள் கருதுகின்றார்கள், மத்தியிலும் ஒன்றிரண்டு மாநிலங்கள் தவிர, பெரும்பாலான மாநிலங்களிலும் வாக்காளர்களின் இக்கோபம் நன்கு வெளிப்படுத்தப் பட்டுள்ளது. வாக்காளர்களின் இந்த மனப்பான்மையை அரசியல் கட்சிகள் கருத்தில் கொள்வது கட்சிக்கும், நாட்டிற்கும் இன்றியமையாததாகும்.

ஆள்மாற்றமா? அடிப்படை மாற்றமா?

மக்களின் தீர்ப்பை ஏற்றுத் தலைவணங்குவது அரசியல்வாதிகளுக்குக் கடமையாகும். மாறாக, அவர்கள் மக்களைவேறுவகைகளில் தண்டிக்க நினைத்தால் அதன் விளைவுகள் மேலும் மோசமாகவே

அமையும். வாக்களித்தவர்கள் கடமை வாக்களிப்பதோடு நிறைவு பெறுகிறது. வாக்கைப் பெற்றவர்கள், மக்களின் உள்ளுணர்வுகளையும், எதிர்பார்ப்புக்களையும், தேவைகளையும் கருத்தில் கொண்டு நல்லாட்சி செய்ய முயற்சி மேற்கொள்ளவேண்டும். ஆட்சிமாற்றம் வெறும் ஆள்மாற்றங்களாக அமைதல்கூடாது. எவ்வெக்குறைபாடுகளை அகற்ற வேண்டுமென்று மக்கள் விரும்பி வாக்களித்துள்ளார்களோ, அவற்றை அகற்றுவது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் முதற் கடமை ஆகிறது. வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் என்ற பேதாபேதம், தேர்தல் முடிந்த பிறகு ஆட்சியாளர்களிடம் சிறிதும் இருத்தல்கூடாது. விருப்பமானவர்களுக்குப் புனித வாக்களிக்கும் மக்களின் ஜனநாயக உரிமையை, ஆட்சியாளர்கள் எவ்வகையிலும் தண்டிக்கக் கருதுதல் கூடாது. தனிமனிதனுக்கு மட்டுமே அல்லாது ஒட்டுமொத்தமாகத் தமிழ்நாட்டையும் தண்டிக்கக் கூடாது. ஆனால் தமிழ்நாடு 20 ஆண்டுகளாகத் தண்டிக்கப்படுகிறது என்றே தோன்றுகிறது. மாநிலக் கட்சியை மக்கள் ஆதரிப்பதால் மத்திய ஆட்சி காவிரிப் பிரச்சனையில் ஏனோ தானோ என்றிருப்பதாகத் தெரிகிறது. மாநில ஆட்சியோ செயல்பட இயலா நிலையில் தயங்கி நிற்பதாகவே படுகிறது. இம்மாற்று அரசாவது இவ்விடர் களைந்து இனிய வழிகாணுமென்று எதிர்பார்க்கிறோம்.

நாடு; கட்சி; தனிமனிதன் :

பொதுவாக, ஆட்சிப்பொறுப்பேற்ற பின்னர் ஆட்சியாளர்கள் நாட்டின் எல்லா மாநிலங்களையும், எல்லா மக்களையும் ஒரே விதமாகப் பாதுகாத்தல்வேண்டும். ஜனநாயகத்தில் முதன்மையான இடம் நாட்டுக்கே உண்டு; அடுத்ததே அரசியல் கட்சிகள்; மூன்றாவதாகவே தனிமனிதர்கள். நாடு - கட்சி - தனிமனிதர் என்ற நிலை நிலவுமானால் அது ஜனநாயக ஆட்சிக்கு அறிகுறி. ஆனால் இந்தியாவில் இதுவரை இம்முறை தலைகீழாகவே நிலவிவந்துள்ளது. தனிமனிதர் - கட்சி - நாடு என்ற முரண்பாடான வரிசை முறையை நாடு மேற்கொண்டது பல இழப்புக்களுக்குக் காரணமாயிற்று. ஜனநாயக வீழ்ச்சிக்கும் அது அடிகோலியது. ஜனநாயகத்தில் தனிமனித வழிபாடு உகந்ததாகாது. அதுபோல், எந்த ஒரு கட்சிக்கும் அளவுக்கு அதிகமான ஆராதனை கூடாது. தனிமனிதனும், கட்சியும் நாட்டுக்காகவே அன்றி, நாடு எந்த ஒரு கட்சிக்கும் தனிமனிதனுக்கும் உரியது என்ற நிலை ஆபத்தானது. இதனை ஆட்சியாளர்களும், அரசியல் வாதிகளும் நாட்டுமக்களும் கருத்தில் கொள்வது நலம் பயக்கும்.

தமிழகம் தண்டிக்கப்படலாமா?

தமிழ் நாட்டில் பொதுத் தேர்தல் முடிவுகள், நாடெங்கும் மக்கள் கொண்டிருக்கும் மனோபாவத்தைப் பிரதிபலிப்பதாகவே உள்ளது. பத்து மாதங்களுக்கு முன்னர், மாநிலக் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தை அறுதிப் பெரும்பான்மையுடன் மாநில ஆட்சியில் அமர்த்திய மக்கள், தற்போது இந்திரா காங்கிரஸ் அணிக்கு முழுமையாக வாக்களித்துள்ளனர். மாநில ஆட்சிக்கு ஒரு கட்சி, மத்திய ஆட்சிக்கு வேறு ஒரு கட்சி என்று வாக்களிக்கும் மனநிலை தமிழகத்தில் நிலவி வருகிறது என்பதையே இத்தேர்தல் முடிவு காட்டுவதாகத் தோன்றுகின்றது. மாநில ஆட்சியாளர்களுக்குத் தோல்வி தந்தமை; வாக்களித்த காங்கிரஸ் கூட்டணி மத்திய அரசில் பொறுப்பேற்க இயலாமை ஆகியன காரணமாகத் தமிழகம் மாநில - மத்திய அரசுகளால் எவ்வகையிலும் தண்டிக்கப் படக் கூடாது என்பதை ஜனநாயகத்தில் நம்பிக்கையுடையோர் வற்புறுத்தவே செய்வர். வாக்காளர் கோபத்தை நீக்க முயல்வதே அறிவுடைமை. தண்டிக்க நினைப்பது அறமாகாது.

காவிரி நீர்ப் பங்கீடு; கட்சி அரசியல் :

யாருக்கும் வாக்களிக்கும் உரிமை மக்களுக்கு உண்டு. விருப்பு வெறுப்புகளைக் கடந்து பணியாற்றுவது நமது கடமை என்று ஆட்சியாளர்கள் கருதுவதே ஜனநாயகப் பண்பு. இப்பண்பு கடந்த காலங்களில் போற்றப்படாமை வருந்தத்தக்கது. விடுதலை பெற்ற முதல் இருபது ஆண்டுகளில் மத்தியிலும் - மாநிலங்களிலும் ஒரே கட்சி ஆட்சி செய்த போது நிறைவேற்றப்பட்ட நலத்திட்டங்களின் வேகம், பின்னர் கட்சி வேறுபாடுகளால் குறைந்தது. ஒரு நிலையில் முற்றாகத் தேக்கம் கண்டது. காவிரி நீர்ப்பங்கீடு, தெலுங்கு கங்கைத் திட்டம் போன்ற மிக இன்றியமையாத முன்னுரிமைப் பணிகள் தேக்கம் கண்டமைக்கு வேறு என்ன காரணம் கூற முடியும்? மாநிலக் கட்சிகளுக்கு வாக்களித்த மக்களைத் தண்டிக்கும் உள்நோக்கம் மத்திய அரசுக்கு இருந்திருக்குமோ என்ற ஐயம் எழுவது இயற்கையே. 1974 இல் காலாவதியான காவிரிப் பங்கீட்டுத் திட்டம் 15 ஆண்டுகளாகவும், தெலுங்கு கங்கைத் திட்டம் 10 ஆண்டுகளாகவும் நிறைவேற்றப்படாமல் இருப்பது கட்சிகளுக்கு இடையிலான போட்டி மனப்பான்மையால்தான் என்பது தெளிவு. ஆனால் தண்டிக்கப்படுவது மக்கள். பாழ்படுத்தப் படுவது மாநில நலன்கள். இனியேனும் இந்நிலை மாறுமா? ஆட்சியாளர்களுக்குக் கட்சியைவிட மக்கள் நலம்பெரிது என்ற சிந்தனை வருமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

மக்கள் காத்திருக்கிறார்கள் !

மக்கள், ஆட்சி மாற்றங்களை விட அடிப்படை மாற்றங்களையே விரும்புகின்றனர். எந்தக் கட்சி என்பதை விட என்ன நன்மை என்பதையே எதிர்பார்க்கின்றனர். ஊழல், லஞ்சம், அராஜகங் களுக்கு மௌனமாக வாக்குச்சீட்டுக்களால் தர்ம அடி கொடுத்திருக் கிறார்கள். மக்களின் நலத்தில் உண்மையான அக்கறை; 'ஆட்சி' தொண்டு செய்வதற்குக்கிடைத்த அரிய வாய்ப்பு என்ற எண்ணம்; எல்லாவற்றிலும் நாடே பெரிது என்ற உண்மை உணர்ச்சி; மேலாக, தனிமனித ஒழுக்கம் இறையுணர்வும் இந்திய அரசியல் வானில் ஒளிவீச வேண்டும். மக்கள் காத்திருக்கிறார்கள். ஆட்சியா ளர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? நல்லுணர்வு பெருகி நாடும் வீடும் நலமுறுவதாக.

ஆட்சி வழங்கிய மக்களை நாளும் வாழ்விப்பீர் !
சாட்சி வழங்கித் தக்க நல்லாட்சியைத் தந்திடுவீர் !

சிவலிங்கம்

சிவபெருமானை நாம் அறிந்துணர்தற்குக்குறியாகச் சிவலிங்கம் ஆலயங்களில் விளங்குகிறது. 'காணும் அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய், நீள் நாகம் அணிந்தார்க்கு நிகழ் குறியாம் சிவலிங்கம்' எனச் சேக்கிழார் சிவலிங்கத் திருவுருவைக் குறிப்பிட் டருளியுள்ளார். சிவலிங்கம் மும்மூர்த்திகளின் சொரூபமாக விளங்குவது. இலிங்க வடிவில் ஆவுடையாரின் அடிப்பாகம் பிரம பாகம், மேற்பகுதி விஷ்ணு பாகம், குழவி - உருத்திரபாகம். இவை முறையே இச்சாசக்தி கிரியாசக்தி ஞானசக்திகளாக விளங்குகின்றன எனவும் கூறுவர்.

சிவலிங்க பாணத்தின் மேல்பாகம் ஈசானமுகமாகவும் மேற்கு சத்யோசாதமுகமாகவும், வடக்கு வாமதேவமுகமாகவும், தெற்கு அகோரமுகமாகவும், கிழக்கு தற்புருட முகமாகவும் கற்பிக்கப்படும். ஆகவே சிவலிங்கம் போக மூர்த்தியாகிய சதா சிவமூர்த்தியாகவிளங்குவதை அறியலாம். கருவறையில்விளங்கும் மூலலிங்கம் அருவுருவ நிலையிலேயே எல்லாக் கோயில்களிலும் இருக்கும். முகலிங்கங்கள் பிராகாரங்களில் தனி இடங்களில் சில ஆலயங்களில் அமைந்து விளங்கக் காணலாம்.

— திரு. வி. சா. கு.

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

தென்திருமுல்லைவாயில்
அருள்மிகு முல்லைவனநாதர் திருக்கோயில்
மண்டலாபிஷேகத்திற்கு எழுந்தருளிய போது
வழங்கியருளிய

ஆசியுரை

21—10—1989

"நெஞ்சார நீடு நினைவாரை மூடு வினைதேய நின்ற நிமலன்
அஞ்சாடு சென்னி அரவாடுகையன் அனலாடு மேனி அரனூர்
மஞ்சாரு மாட மனைதோறும் ஐயம் உளதென்று வைகி வரினும்
செஞ்சாலி நெல்லின் வளர் சோறு அளிக்கொள்
திருமுல்லைவாயில் இதுவே."

— திருஞானசம்பந்தர்.

மண்டலாபிஷேகம் :

இங்கு, இன்று, இத்திருக்கோயில் மண்டலாபிஷேகச்சிறப்பினை ஒட்டி, திருமுல்லைவனநாதருக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெற்றது. இந்த அபிஷேக நேரத்தில் இத்தலத்திருப்பதிகத்தையும் திருநீற்றுப் பதிகத்தையும் இச்சந்நிதியில் பாராயணம் செய்தபொழுது, இறையருளால் சில சிந்தனைகள் தோன்றின. அவற்றை இப்பொழுது சிந்திக்கலாம்.

ஓதுதற்குரிய இடம் :

இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு அணிகொண்ட கோதை அம்மை, பெருமானிடம் உபதேசம் பெற்றமையைத் திருஞானசம்பந்தர் இத்தலப் பதிகத்தின் நிறைவுப் பாடலில் குறிப்பிட்டருளுகிறார்.

"அணிகொண்ட கோதைஅவள் நன்றும்ஏத்த அருள்செய்த எந்தை"

என்று குறிக்கிறார். இத்தலமே, இறைவனிடம் இறைவி பஞ்சாக்ஷர உபதேசம் பெற்றதலம் என்றும் இதற்குப் பொருள் காணலாம். அல்லது, திருக்கயிலையில் இறைவன் இறைவிக்கு உபதேசித்தருள,

அம்மை அம்மந்திரத்தை நன்கு ஓதி - உருவேற்றி, அருள்பெற்ற இடம் இத்தலம் என்றும் பொருள் கூறலாம்.

எனவே, சிவமந்திரங்களை உபதேசம் பெறுதற்கும் உருவேற்று தற்கும் உரியதலம் இது என்பதும் அங்ஙனம் செய்வோர் விரைவில் இறையருள் பெறுவர் என்பதும் இதனால் புலப்படும். பொதுவாகத் தமது இல்லத்தில் தனித்து சிவமந்திரங்களை உருவேற்றுவதைவிட, இதுபோன்ற திருக்கோயிலில் இறைவன் சந்நிதானத்தில் ஓதினால் பலனைவிரைவில் முழுமையாகப் பெறலாம் என்பது சிவாகமங்களின் முடிபு. அம்முடிவு இத்தலத்தின் அனுபவமாயிற்று.

வினை நீங்க வழி :

இப்பதிகத் திருப்பாடல்களில் ஏழாவது பாடல் வேறு ஒரு தெளிவினைத் தருகிறது. சித்தாந்த சாத்திரங்கள், ஓர் உயிர், இப் பிறவியில், அனுபவிப்பதற்கு என்று கொண்டுவந்த வினைகளை அனுபவித்தே தீரவேண்டும் என்று கூறுகின்றன. ''ஏன்ற வினை உடலோடு ஏகும்'' என்பது திருவருட்பயன். ஒவ்வொருவரும் அனுபவிக்கவேண்டிய வினைகளை அனுபவித்தே தீரவேண்டுமாயின், வழிபாடு, பாராயணம் செய்தல் போன்றவை எதற்கு? இவற்றால் என்ன பயன்? என்னும் கேள்வி எழும். இதற்கு இப்பாடலில் விடை தருகின்றார் திருஞானசம்பந்தர். நாள்தோறும் தூய நெஞ்சுடனும் அழுத்தமான பக்தியுடனும் இறைவனை இடைவிடாது நினைந்து வழிபடுவாராயின், அவர் அனுபவிக்க வேண்டிய வினைகளின் தாக்கம் இறையருளால் குறையும் அல்லது மறையும் என்பது அப்பெருமான் தரும் விடை.

'' நெஞ்சார நீடு நினைவாரை மூடுவினை, தேய நின்ற நிமலன் ''

என்பது அப்பொருளுடைய தொடர்கள். ஈண்டு, ''நெஞ்சு ஆர்தல்'' என்பது நெஞ்சு நிறைதல் என்னும் பொருளைத் தருகிறது. நெஞ்சு நிறைய நீடு நினைவார் எவரோ அவரின் வினை தேய அருளுவன் என்பது இதற்குப் பொருள்.

அருளாளர்கள் வாக்கு !

இங்குத் திருஞானசம்பந்தர், 'நீடுநினைதல்' என்று குறித்தருளி யிருப்பதைப் போல, அப்பர் சுவாமிகளும், 'பிரிவிலா அடியார்க்கு என்றும் வாராத செல்வம் வருவிப்பானை' என்றும், ''தீரா நோய் தீர்த்தருள வல்லான்'' என்றும், சுந்தரர், ''நீள நினைந்தடியேன் உனை நித்தலும் கை தொழுவேன்'' என்றும் அருளியிருக்கின்றனர். இடையறுப் பேரன்பு என்று சிவஞானமுனிவரும், சிந்தைஇடையறு அன்பு என்று சேக்கிழாரும் குறிப்பிடுதலும் காணலாம்.

எனவே அழுத்தமாகவும் தொடர்ந்துப்பக்தி செலுத்துவோரின் வினையை இறைவன் போக்குவான் என்பது திருமுறைகளின் கருத்து. ஒருவர் செய்த வினையை அனுபவித்தேயாக வேண்டும். என்பதும், இறைவனை வழிபட்டால் வினை நீங்கி விடும் என்பதும் முரண்பாடாகத் தோன்றுகிறதே எனின், இல்லை. இறைவனைத் தொடர்ந்து வழிபடுவதும், நீள இடையறாது நினைவதுமே அவரவர் செய்த வினைகளை அநுபவித்ததாகி விடுவதால் வினை நீங்கும் என்று அருளினர் நமது ஆசாரியர்கள். இதில் முரண் இல்லை. பின்னே, திருமறைக்காட்டில் அருளிச் செய்த கோளறு திருப் பதிகத்தில் ''வேயுறு தோளிபங்கன் என்உளமேபுகுந்தஅதனால் ஆசறும் நல்ல நல்ல அவைநல்லநல்ல அடியார் அவர்க்கு மிகவே'' என்று இக்கருத்தைப் பாடியருள இருக்கும் இஞ்ஞானக்குழந்தை, 3 வயதில் ஞானப்பாலுண்ட பிறகுசெய்த இரண்டாவது யாத்திரை யிலேயே இக்குறிப்பைத் தருகிறது என்பது ஈண்டு சிந்திக்கத் தக்கது. திருஞானசம்பந்தர் செய்த முதல் யாத்திரை திருக்கோலக்கா. இரண்டாவது யாத்திரை, திருநனிபள்ளி, திருத்தலைச்சங்காடு, திருவலம்புரம், திருப்பல்லவனீச்சரம், திருச்சாய்க்காடு, திருவெண் காடு, திருமுல்லைவாயில் என்பன ஆகும்.

பரசமய கோளரி :

திருமுல்லைவாயில் தலப்பதிகத்தில்,

''பனைமல்கு திண்கை மதமாளரித்த பரமன்ன நம்பன் அடியே
நினைவன்ன சிந்தை அடையாத தேரர் அமண் மாய நின்ற
[அரன் ஊர்''

என்று வருகிறது. இதில், ''நம்பன் அடியே நினைவன்ன சிந்தை அடையாத தேரர் அமண் மாய நின்ற அரன் ஊர்'' என்னும் தொடர் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது. சிவபெருமானை நினைக்காத புத்தரும், சமணரும் மாய நின்ற, இறைவன் எழுந்தருளியுள்ள ஊர் இது என்கிறார். புறச்சமயவாதிகளின் செருக்கு அழித்துச் சைவநெறி பரப்பியவர் திருஞானசம்பந்தர். இவரின் அவதார நோக்கம் பரசமயம் நீருக்கி, சிவசமயநெறி பரப்புதல் ஆகும். இச் செயல் நிறைவேறிய தலம் மதுரை. அங்குப் பிள்ளையார் பாடி யருளிய, ''மந்திரமாவது நீறு'' என்பது முதலான பதிகங்களின் கருத்துக்களை இனிச் சிந்திக்கலாம்.

மங்கல வேடம் :

இத்திருநீற்றுப் பதிகத்தில் 5 ஆவது பாடலில் ''பெருந்தவத் தோர்களுக்கெல்லாம் ஆசை கெடுப்பது நீறு'' என்று அருளி யுள்ளார். இதனைப் படித்த பலர், ஆசையைக் கெடுப்பது நீறு என்று இருப்பதால் இளைஞர், இளைஞியர் விபூதி தரித்தல் கூடாது என்று

கூறிவருகின்றனர். இது தவறு. மங்கலமாம் திருவேடம் அது. இத் திருவேடம் இளைஞர், இளைஞியர் அனைவருக்கும் நன்மை தரக் கூடியது. இத்திருநீறு எல்லோருக்கும் ஆசையைக்கெடுத்துவிடாது. "பெருந்தவத் தோர்க்கெல்லாம் ஆசையைக் கெடுப்பது நீறு" என்றுதான் ஞானசம்பந்தர் அருளியுள்ளார். இஞ்ஞானாசிரியர் இப்பதிகத்தில், அடுத்த பாடலில் "அருத்தமதாவது நீறு; அவலம் அறுப்பது நீறு" என்றும் பாடியுள்ளார். ஈண்டு 'அருத்தம்' என்பது பொருளைக்குறிக்கிறது. இங்குப் பொருள் என்பது உலகவாழ்விற்குப் பயன்தரும் பொருளைக் குறிக்கும். எனவே, மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து, பின் அதில் உவர்ப்பு ஏற்பட்டு அருள் நாட்டம் கொண்டோர்க்குத்தான் ஆசை கெடுக்கும் என்று பொருள் கொள்ளல் வேண்டும். இறைவனும் மனித உயிர்களை மண்ணில் நல்ல வண்ணம் வாழ வைத்துப் பின்னர்த் தகுதி கூடியபோது விண்ணிலும் நல்ல வண்ணம் வாழ்தலாகிய வீடுபேறு அளிப்பன்.

இருவகை அமைப்பு

இந்தப் பதிகத்தில் இன்னும் ஒரு குறிப்புச் சிந்திக்கத்தக்கது. இதில், முதல் ஆறு பாடல்களின் ஈற்றுத் தொடரில் "திருஆலவாயான் திருநீறு" என்றும் பின் நான்கு பாடல்கள் 'ஆலவாயான் திருநீறு' என்றும் அமைந்துள்ளன. இங்ஙனம் 'திரு' என்னும் அடைமொழி கொடுத்தும் பின் அடைமொழி இன்றியும் இருபகுதியாக அமைந்திருப்பது – திருஞானசம்பந்தரின் திருக்கரங்களினால் திருநீறு அணிவிக்கப் பெற்று, பாண்டியனின் உடலில் முதலில் வலப்பாகமும் பின்னர் இடப்பாகமும் அடுத்தடுத்து நோய் நீங்கப் பெற்றன என்னும் குறிப்புக்களே அந்நற்சிந்தனையாம்.

துயர்தீர்க்கும் திருப்பதிகம் !

இத்திருநீற்றுப் பதிகத்தை உள்ளம் உருக ஓதித் திருநீறு அணிந்தால் நோய், ஜுரம் ஆகியன விலகும் என்பது உறுதி. விஷ ஜுரம் நீங்க, "அவ்வினைக்கு இவ்வினை............" எனத் தொடங்கும் திருநீலகண்டத்திருப்பதிகத்தையும், நாள், கோள், போன்றவற்றால் வரும் தீங்குகளும் விலங்குகள் பறவைகள் என்பனவற்றால் வரும் இடர்ப்பாடுகளும் நீங்க, 'வேயுறு தோளிபங்கன்..." என்னும் கோளறு திருப்பதிகத்தையும் பாராயணம் செய்ய வேண்டும். "மறையுடையாய்" என்ற ஞானசம்பந்தர் பதிகமும் அகத்திடரும் புறத்திடரும் களையும் திறத்தது.

அனல் வாதம் !

பாண்டிய மன்னனின் உடலிலுள்ள வெப்பு நோய் நீங்கிய பிறகு சமணர்களின் தூண்டுதலினால் அனல்வாதம் நிகழ்த்தப் பெறுகிறது. அப்பொழுது புதிதாக ஒரு பதிகத்தைச் சம்பந்தர்

பாடியருளாமல், திருமுறைக்கட்டில் கயிறு சார்த்திப் பார்க்கும் பொழுது, திருநள்ளாற்றுப் பதிகமாகிய " போகமார்த்த பூண்முலையாள் '' என்னும் பதிகம் கிடைக்கிறது. இங்குச் சமணர்களுடன் வாதம் செய்யத் தொடங்கும் பொழுது, புதிதாகப் பதிகம் பாடாததற்கும் எல்லாப் பதிகங்களிலும் இந்தப்பதிகம் கிடைத்ததற்கும் என்ன காரணம் என்னும் சிந்தனை எழுவது இயற்கை. இறையருள் தான்ஞானசம்பந்தர் உள்ளத்தில் இவ்வெண்ணத்தைத்தூண்டியது. நம்பெருமானின் இலக்கணம் முழுவதும் இத்திருப்பதிகத்தில் அமைந்துள்ளது. மேலும், சமணர்களுடன் வாதமாதலின் இப் பதிகத்தின் பத்தாவது பாடலில்

'' மாசுமெய்யர் பண்டைத்தேரர் குண்டர் குணமிலிகள்
பேசும் பேச்சை மெய்யென்றெண்ணி அந்நெறிசெல்லன்மின் ''

என்ற அறிவிப்பும் உள்ளதாகலின் இப்பதிகம் திருவருள் வாய்ப்பாகக் கிடைத்தது என்பதே காரணமாம்.

அரிய அருளிப்பாடு :

பாண்டியமன்னன் இருதிறத்தாரையும் வாதப்படி உங்கள் கடவுள் எப்படிப்பட்டவர்? அவர் நிலை என்ன? என்று கேட்ட கேள்விக்கு விடையாகவும் இறைவன் எல்லா உயிர்களின் இன்பத் துன்பங்களிலும் கலந்து இருக்கின்றான் என்னும் குறிப்பும் இப் பதிகத்தில் உள்ளது. இப்பதிகம் முழுமையும் திருஞானசம்பந்தர், "நம்பெருமான் மேயது நள்ளாறே" என்றே அருளியிருக்கின்றார். அத்தகைய நம்பெருமான் எப்படிப்பட்டவர் என்றால், போகியாகவும் யோகியாகவும் வேகியாகவும் இருந்தருளுகின்றான் என்கிறார். இப்பதிகத்தின் முதல்பாடல்,

'' போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண் வெள்ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண ஆடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே ''

என்பது. இதில், ''போகமார்த்த பூண் முலையாள்...'' என்பதினால் இறைவன் போகியாக இருக்கின்றான் என்பதும் ''ஆகமார்த்த தோலுடையான்'' என்பதினால் வேகியாக இருக்கின்றான் என்பதும் ''கோவண ஆடையின் மேல் நாகமார்த்த நம்பெருமான்'' என்பதினால் யோகியாக இருக்கின்றான் என்பதும் தெளிவாகும். இறைவன் போகியாய் இருந்து உயிர்களுக்குப் போகத்தை ஊட்டுகின்றான் என்றும், வேகியாய் இருந்து வினைகளினின்றும் விடுவிக்கின்றான் என்றும், யோகியாய் இருந்து முத்தி தருகின்றான் என்றும் கூறுவர். இதனைச் சிவஞானசித்தியார்,

"போகியாய் இருந்து உயிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்
யோகியாய் இருந்து முத்தி உதவுதல் அதுவும் ஓரார்
வேகியானால் போல் செய்த வினையினை விட்டல் ஓரார்
ஊகியா மூடரெல்லாம் உம்பரில் ஒருவன் என்பார்"

என்று கூறுகிறது. போகமார்த்த பூண்முலையாள் என்னும் பதிகம், உமைஒருபாகம் கொண்ட அட்டமூர்த்தியாகிய இறைவனே மெய்ப்பொருள் என்று கூறுகிறது. திருமுறைகளில் கயிறுசார்த்திப் பார்த்து எடுக்கிற பழக்கம் முதன் முதல் திருஞானசம்பந்தரால் இங்குத்தான் தொடங்கப் பெற்றுள்ளது. இங்ஙனம் இப்பதிகத்தை எடுத்தவுடன் பிள்ளையார் திருநள்ளாற்றுப் பெருமானை மனத்தில் தியானித்துப் பாண்டியன் முன்னிலையில் திருநள்ளாறர் திருநாமம் கொண்ட இப்பதிகத்தை எரியினில் இடில் பழுதில்லை - இதுசத்தியம் என்று ஆணையிட்டு ஒருபதிகம் பாடுகின்றார். அது, "தளிரின வளரொளி" என்று தொடங்குவது. இப்பதிகத்தின் திருக்கடைக் காப்புச் செய்யுளில்,

"சிற்றிடை அரிவைதன் வனமுலை யினையொடு செறிதரும்
நற்றிறம் உறுகழுமல நகர் ஞானசம்பந்தன
சொற்றமிழ் எதிரிடை எரியினில் இட இவை கூறிய
சொற்றெரி ஒருபதும் அறிபவர் துயரிலர் தூயரே"

என்ற, பாண்டியன் முன்னிலையில், இப்பதிகம், இன்ன நோக்கில் பாடப்பெற்றது என்னும் குறிப்பு உள்ளது.

புனல் வாதம் :

இப்பதிகத்தில் எல்லாப் பாடல்களிலும் உமையம்மையின் தனபாரத்தைச் சிறப்பித்துப் போற்றியுள்ளார். அருள்சுரந்து இவ்வுலகைத் தாயாக இருந்து காத்தருளும் அன்னையினை, இவ் வண்ணம் போற்றுவது சிறப்புத்தானே!

திருநள்ளாற்றுப் பதிகத்தை அனலில் இட, எரியாமல் இருப்பதைக் கண்ட சமணர்கள், பின்னர்ப் புனல் வாதத்திற்கு அழைக்கின்றனர். பிள்ளையார், அப்பொழுது, "வாழ்க அந்தணர்..." என்று தொடங்கும் பதிகத்தை அருளுகின்றார். இது திருப்பாசுரம் எனப் பெயர் பெறும். இதில் உள்ள முதல் பாடலில் - வாழ்க அந்தணர் என்றும், பிறகு வானவர் வாழ்க என்றும் இவர்களுக்கு ஒப்பப் போற்றத்தகும் ஆனினம் வாழ்க என்றும் இவர்கள் வாழ்ந்தால் தண்புனல் வீழும் எனவே தண்புனல் வீழ்க என்றும் மழைபொழிவதால் வேந்தனின் நல்லாட்சி மலருமாதலால்

வேந்தனும் ஓங்குக என்றும் நல்லாட்சி மலர்ந்தமைக்கு அடையாள மாக தீயது ஆழவேண்டுமாகலின் ஆழ்க தீயது என்றும், அத்தீமை மீண்டும் வாராதவாறு இருக்க வேண்டுமாயின் அரன்நாமம் சூழ வேண்டும் என்பாராய் எல்லாம் அரன் நாமமே சூழ்க என்றும், அசையும் பொருள் அசையாப் பொருள்களிலெல்லாம் அரன்நாமம் சூழுமாயின், வையத்தில் என்றுமே துயர்சூழாது என்பாராய் அரன் நாமமே சூழ்க என்ற தன்பின் முடிபாக வையகம் துயர் தீர்க அருளிச் செய்தார்.

" வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது; எல்லாம் அரன்நாமமே
சூழ்க; வையகமும் துயர்தீர்கவே "

என்பது அப்பாடல். இதில் துன்பநீக்கமும் இன்ப ஆக்கமும் சுட்டப் பெற்றுள்ளன. ஆழ்கதீயது என்பதும் துயர் தீர்க என்பதும் துன்பநீக்கம். வீழ்க தண்புனல் என்பதும் வேந்தனும் ஓங்குக என்பதும் வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் என்பனவும் எல்லாம் அரன்நாமமே சூழ்க என்பதும் இன்ப ஆக்கம்.

சைவநெறி மக்கள் உள்ளத்திலும், வாக்கிலும், நடைமுறையிலும் விரவிப்பரவ வேண்டுமாயின் ஒவ்வொரு சைவரும் மந்திரமாவது நீறு, போகமார்த்த பூண்முலையாள், தளிரிள வளரொளி, வாழ்க அந்தணர்என்னும் இந்த நான்கு திருப்பதிகங்களையும் நாள் தோறும் நியதியாகப் பாராயணம் செய்து நலம் உறுவார்களாக.

வாழ்த்து ;

இங்ஙனம் இறைவனின் திருச்சந்நிதியில் பதிகங்களைப் பொருளுணர்ந்துநாளும் நியமமாகப் பக்திசிரத்தையோடு ஓதுவதை நற்பழக்கமாகக் கொண்டு, சைவநெறி சேர்ந்து வாழும் பேறு பெற்று, அதனுல் இவ்வுலகம துன்பம் நீங்கி இன்பம் அடைய முயலுமாக !

இத்திருக்கோயில் குடமுழுக்கு விழாவிற்கும் மண்டலாபிஷேக விழாவிற்கும் பாடுபட்டும் பொருளுதவி செய்தும் துணை நின்ற அன்பர்கள் அனைவரும் எல்லா நலன்களும் பெற்று நீடு இனிது வாழவும், இவ்வுலக மக்கள் சைவநெறி நின்று நற்கதி அடையவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்ருேம்.

சைவ வளர்ச்சியே மக்கள் வளர்ச்சி !
சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குக !

திருவூடல்

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம்.ஏ

திருவாதிரைத் திருநாளில் ஸ்ரீ நடராசப்பெருமான் ஸ்ரீ சிவகாமி அம்மையாரோடு திருவீதி உலாவந்து திருக்கோயிலுக்குள் எழுந்தருளும் வேளையில் திருவூடல் ஐதிக நிகழ்ச்சி நிகழ்த்தப்பெறும்.

திருவையிலிய பெருமானை நிறுத்தி அம்பிகையை மட்டும் கோயில் பிராகாரத்திற்குள் தனியே எழுந்தருளச் செய்து நிறுத்தி சுந்தரமூர்த்தி சுவாமிகளை ஊடல் தீர்ப்பவராகப் புறப்பாடு செய்வித்து ஓதுவார்மூர்த்திக்குப் பட்டுப்பரிவட்டம் சாத்தி அவரைச் சுந்தரரின் பிரதிநிதியாகப் பாவித்து அவர்வாயிலாகத் திருவூடலை வாசிக்கச் செய்தல் வேண்டும்.

சுந்தரர் : (ஓதல்) **துதி**

திருச்சிற்றம்பலம்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் — உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
அத்தா வுனக்கு ஆளா இனி அல்லேன் எனலாமே

சுவாமி :

" நம் அருளாலே தோன்றி நாம்ஏவ இங்கு வந்தாய்
இம்மையின் மாயவாழ்வின் இடர்ப்படாது உன்னை ஆளச்
செம்மையில் நாமே வந்துன் திருமணம் தடுத்தாட்கொண்டோம்
மும்மையின் தொண்டன் என்ன மொழிந்தனன் உனக்குநாமம்"

வாரும் சுந்தரரே ! இன்றைய தினம் நம்தேவி சிவகாமசுந்தரி நம்மேல் ஊடல்கொண்டு நம்மைக் கோயிலுக்குள் புகவிடாமல் தடுத்துத் திருவுளக் கோபமாகச் சென்று விட்டாள்.

அம்மையாருக்கு நாம் என்ன தாழ்வு பண்ணினோம்? ஆடை ஆபரணங்களில் யாதொரு குறையும் வைக்கவில்லையே. நம்மைத் தரிசித்த அன்பர்கட்கு நம்மோடு உடனிருந்து போக மோட்சங்களைக் கொடுக்க வேண்டிய அம்மையார் இந்நேரத்தில் ஊடலாயிருக்கலாமோ! நீர் போய் ஊடல் தீர்த்து அழைத்து வாரும்?

(எனச் சுவாமி திருவுளம் பற்றிச் சொல்ல, சுந்தரர் பணிந்து அம்பிகை சந்நிதியை அடைகிறார்)

சுந்தரர் :

தம்பியாரூரன் வந்தான் நாவலூர் நம்பி வந்தான்
உம்பரால் அறிய ஒண்ணா உண்மைகள் உரைப்பான் வந்தான்
செம்பொனார் மதில்கள் சூழும் திகழ்செல்வத் திருவாரூரில்
தம்பிரான் தோழன் வந்தான் என்றனதாரைச் சின்னம்

அகிலாண்டங்களைப் பெற்ற அன்னையே வணக்கம். தாங்கள் மகாதேவரிடம் கொண்ட கோபம் நீங்கி அவரைத் திருக்கோயிலுக்குள் எழுந்தருளச் செய்ய வேண்டும் என்பது அடியேனின் பிரார்த்தனை ஆகும்.

(என்று சுந்தரர் விண்ணப்பம் செய்ய)

அம்பிகை :

வாரும் சுந்தரரே ! உம்முடைய கர்த்தரான பரமேசுவரர் சுடுகாட்டில் ஆடுவதையும், ஆமை ஓடு பன்றிக் கொம்பு இவற்றை அணிவதையும், புலித்தோல் உடுப்பதையும் தலையோட்டைக் கையில் தாங்கித் திகம்பரராய்ப் பிக்ஷாடனராய்த் திரிவதையும் பொறுத்தோம். தாருகாவனம்சென்று ரிஷிபத்தினிகளைக்கண்டு இச்சித்ததையும், எனக்கு எதிரியாக ஒருத்தியைச் சடையிலேவைத்துக் கொண்டு இருப்பதையும் எம்மால் பொறுக்க முடியவில்லையே ! அதைக்கண்டு சகியாமல்தான் நாம் அவரோடு ஊடலானோம். இப்படிப்பட்ட நாயகருடன் உறவுகொள்ளவேண்டும் என்று வந்து சொல்லும் நீரும் பெரியவரே ! அவரும் பெரியவரே! இத்தகைய தகாத செயல்கள் உங்களுக்கு ஏற்றவையாக இருக்கலாம். இங்குச் செல்லாது; அவர் சதிவெல்லாது; நம் உள்ளம் பொறாது; நீரும் இங்கே நில்லாது யாதொன்றும்சொல்லாது போம்.

(என அம்பிகை சினந்துகூறச் சுந்தரர்சுவாமியிடம் செல்கிறார்)

சுந்தரர் :

வங்கம்மலிகடல் நாகைக்காரோணத்தெம் வானவனே
எங்கள் பெருமானோர் விண்ணப்பம் உண்டது கேட்டருளீர்
கங்கை சடையுட் கரந்தாயக் கள்ளத்தை மெள்ளஉமை
நங்கை அறியின் பொல்லாது கண்டாய் எங்கள் நாயகனே.

தேவரீர் ஆலகால விஷத்தை உண்டும் இடபம் ஏறியும் செய்தருளிய திருவிளையாடல்கள் அனைத்தையும் அம்பிகை பொறுத்தார்கள். தம்மை இடப்பாகத்தில் வைத்துக் கொண்டே கங்கை நங்கையைத் தேவரீர் சடைமிசை மறைத்து வைத்திருப்பதையும், ரிஷிபத்தினிகளை இச்சித்ததையும் அறிந்து மிகவும் ஊடலாயிருக்கிறார்கள். தேவரீருக்காகத் தூது சென்ற எம்மைப் பாங்கிமாரைக்

கொண்டு உள்வார்த்தை இங்குச் செல்லாது எனக்கூறிவிரட்டியும் விட்டார்கள். அடியேனும் இந்த ஊடலைத் தீர்ப்பது என்பது மிகவும் சிரமம். தேவரீரே ஏதேனும் ஒரு உபாயத்தைப் பண்ணிக் கொள்ள வேண்டும். அடியேனால் இவ்வூடலைத் தீர்க்க இயலாது.

(எனச் சுந்தரர் கூறி நிற்க)

சுவாமி :

'வாரும் சுந்தரரே! எம்மேல் தேவியார் சொல்லியுள்ள இரண்டு குற்றங்களுக்கும் சமாதானம் சொல்கிறேம்; கேளும்.

பகீரதனுக்காகப் பொங்கி வந்த கங்கையை நாம் சடைமீது தாங்கித் தடுத்திராவிட்டால் இந்த உலகமனைத்தும் அழிந்துவிடும். கங்கையைச் சடையில் தாங்கியது உலகைக் காப்பாற்றுதற்காக அல்லவா? தாருகாவன முனிவர் நம்மை மதியாது தாமே பெரியவர் எனத் தருக்கித் தீ வேள்வி செய்து நம்மை அழிக்க எண்ணினர். அவர்களுக்குப் புத்தி புகட்ட அல்லவோ நாம் பிக்ஷாடனராய்ச் சென்றேம். இதை எல்லாம் இன்னொருதரம் போய்ச் சொல்லிச் சமாதானம் செய்து அழைத்துவாரும்.'

(என்று சுவாமி கூற, சுந்தரர் அம்பாள் இருப்பிடத்திற்குச் செல்கிருர்)

சுந்தரர் :

மகாதேவி! தங்கள் நாயகர் செய்தருளிய திருவிளையாடலைப் பற்றிச் சினம்கொள்ளாமல் மனம் இரங்கிக் கோபம் தணிய வேண்டும். உலக மாதாவாக இருக்கிற தங்கட்கு யார் சொல்லமுடியும்?

தாருகாவன ரிஷிகள் கர்மமே கர்த்தா என்று பெருமானை இகழ்ந்ததால் அவர்கள் கர்வம் அடங்கவே பெருமான் பிக்ஷாடனராய் எழுந்தருளினர் ஊழிக்கால வெள்ளம்போல உலகை அழிக்க வந்த கங்கையை உயிர்களையெல்லாம் காப்பதற்காகவே தம் சடையில் தரித்தார். இவைகளைக் குற்றமென்று கருதாமல் பெருமானிடம் எழுந்தருள வேண்டும்.

என்று விண்ணப்பம் செய்த சுந்தரரைப்பார்த்து

அம்பிகை :

வாரும் சுந்தரரே! உம்மர்தீநர் செய்த குற்றங்களுக்கெல்லாம் பொருத்தமானசமாதானம் சொல்லஉம்மைமகாதேவர் அனுப்பினர் போலும்,

உமக்குப் பொன் வேண்டும் போதெல்லாம் கொடுத்தும் வெயில் மழை பாராது வீடுதோறும் இரந்து உமக்கும் அன்ன மிட்டும் ஆதரித்தவர் அவர். உண்ட வாய் வாழ்த்த வேண்டாவா? உம்நன்றி புரிகிறது. தூர்த்த வியாபாரம் பண்ணுவார் பேச்சைப் பேசவேண்டாம் நீர் போகலாம்.

என்று அம்பிகை இரண்டாவது முறையும் சினம் தணியாமல் கூறக் கேட்ட சுந்தரர் சுவாமியிடம் எழுந்தருளுகிறார்.

சுந்தரர் :

ஒருத்திதன் தலைச்சென்றாளைக் கரந்திட்டான் உலகம் ஏத்த
ஒருத்திக்கு நல்லனாகி மறுப்படுத்து ஒளித்து மீண்டே
ஒருத்தியைப் பாகம் வைத்தான் உணர்வினால் ஐயமுன்னி
ஒருத்திக்கு நல்லனல்லன் ஒற்றியூருடைய கோவே.

தேவரீர் எது குற்றம் செய்தாலும் என்னுடைய தாயாராகிய பரமேஸ்வரி பொறுத்திருக்க, தேவரீர் கங்கையைச் சடையிலே ஒளித்து வைத்திருக்கிற கள்ளத்தை யறிந்து என்ன சொன்ன போதிலும் ஆக்ஷேபணை செய்து தள்ளி விட்டார்கள். இனிமேல் என்னாலே ஒன்றும் செய்ய இயலாது. என்னை விட்டுவிடுங்கள் சுவாமி.

என்று சொன்ன சுந்தரரை நோக்கிச் சுவாமி திருவுளம் பற்றுகிறார்.

சுவாமி :

வாரும் சுந்தரரே! உனக்கும் பரவையாருக்கும் ஏற்பட்ட ஊடலைத் தீர்க்க ஓர் இராத்திரியெல்லாம் பரவை வீட்டுக்குப் பலமுறை நடந்து நாம் சமாதானம் பண்ணினோமே. நீர் எங்களுக்குள் ஏற்பட்ட ஊடலைத் தீர்க்க இயலாது என்றால் உம்மைவிட வேறொரு தோழன் எமக்கு உண்டோ சொல்லும். இந்த ஊடலை நீரே எந்த விதமும் தீர்க்கவேண்டும்.

என்று சுவாமி கூறச் சுந்தரர் அம்பாள் சந்நிதி செல்கிறார்.

சுந்தரர் :

அம்மையே! பரமேஸ்வரரிடத்தில் ஒரு குற்றமும் இல்லை. பகீரதன் வேண்டப் பொங்கி வந்த கங்கை வெள்ளத்தைப் புல் நுனிப் பனித்துளி போலத் தம் சடையில் தாங்கி உலகைக் காத்தருளினார் இறைவன். இதுதான் உண்மையே தவிரக் கங்கா தேவியை ஆசையாய்ச் சடையில் ஒளித்தாரில்லை. மேலும் தங்களுக்கே சர்வசுதந்திரமும் கொடுத்துள்ளார். இறைவனும் இறைவியும் கூடியிருந்தால் தானே உலகமும் போக போக்கியங்களுடன் வாழ முடியும். ஆதலால் ஊடல் தணிந்து பெருமானிடம் எழுந்தருள வேண்டும்.

என்று சுந்தரர் வேண்ட அம்பிகையும் கோபம் நீங்கித் திருவுளம் மகிழ்ந்து புன்சிரிப்புடன் சுவாமி சந்நிதிக்கு எழுந்தருளி வலம் வந்து இடப்பாகத்தே நிற்க, பெருமான் ஆனந்ததாண்டவம் ஆடி அன்பர்கட்கு அருள்புரிவதைத் தரிசித்த சுந்தரர் மகிழ்ந்து செய்தருளிய தோத்திரம்.

சூடினார் கங்கையாளைச் சூடிய துழனி கேட்டங்கு
ஊடினாள் நங்கையாளும் ஊடலை ஒழிக்க வேண்டிப்
பாடினார் சாமவேதம் பாடிய பாணியாலே
ஆடினார் கெடிலவேலி அதிகைவீ ரட்டனாரே.

திருச்சிற்றம்பலம்

உவகையில் தோன்றும் உலகு!

திரு. அரங்க. முத்துமணி

உலகம் தழைத்தே உயர்ந்ததோர் வாழ்வில்
இலக்கும் அமைதியைக் காண — நலம்விளைய
நற்பணிகள் ஆற்றும் நமது குருமணிகள்
பொற்பாதம் கொண்டேன் புகல்.

★

புகலுங்கால் வாழ்வைப் பொலியவே செய்யும்
நிகரற்ற தொண்டினிலே நின்று — தகவுடனே
வந்திடும் ஏடுகள்; வாழ்க்கையில் நன்மையைத்
தந்திடும் ஒன்றிரண்டு தாள் !

தாளிற் சிறந்தே இறைவன் அருள்மிகு
தாளினைக் காட்டுகின்ற தாள்களில் — நாள்மலர்
சிந்தும் நறுந்தேனும் செய்வதைப் போலவே
தந்திடும் தண்டமிழ்த் தேன்.

தேன்மலராம் " ஞானசம் பந்தம் " திருவருளைத்
தான்காட்டி, நம்மைத் தருமையிலே — வான்கருணை
நல்கும் குருமணிகள் நல்லதோர் பாதையிலே
செல்லவைக்கும் என்றும் சிறந்து !

சிறந்த மலர்தானும் செந்தமிழைத் தாங்கிப்
பிறந்த பயன்தன்னைத் தேட — அறவழியில்
ஏழேழாம் யாண்டினையே எய்தியதைக் காண்கின்றோம் !
வாழி நலமுடனே வந்து !

வந்தெம்மை வாழ்விக்கும் வண்ண நறுமலரே !
சிந்தும் தமிழ்த்தேனில் சிக்குண்டோம் — முந்தை
தவப்பயனும் என்றும்நம், சைவத்தைச் சார்ந்தால்
உவகையில் தோன்றும் உலகு !

எது கோபம்?

திரு. கருமுத்து சு. சொக்கலிங்கம்
மதுரை.

மனித மனம் உலகப் பொருள்களின் மேல் ஆசை கொள்கிறது. அம்மனம் அப்பொருள்களை அடைய வேண்டும் என்ற முயற்சியில் ஓயாது ஈடுபடுகிறது; அதனால் பற்றுள்ளம் வளர்கிறது. தான் விரும்பியது நிறைவேறாதபோது - தான் விரும்பிய பொருள் கிட்டாத போது, மனம் கோபம் அடைகிறது. அப்பொருள் கிடைக்காமல் தடையாக இருப்பவர் மீது கோபம் பாய்கிறது.

கோபத்தின் இயல்புகள் :

கோபத்தின் இயல்புகள் கொடிய விளைவுகளை உருவாக்குபவை. கோபம் அறிவை மறைக்கிறது; அதனால் தோன்றும் அறியாமை கண்ணை மறைக்கிறது. நமது நற்பெயர் கணப்பொழுதில் பாழ்படுகிறது.

கோபத்தால் உடம்பு துடிக்கிறது; நாடி நரம்புகள் புடைக்கின்றன. அதாவது ஒரு மனிதன் கொள்ளும் கோபம் சிறுகச்சிறுக அவனையே அழித்து விடுகிறது. அதனால் தான் வள்ளுவப் பெருந்தகை.

"சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்"

(திருக்குறள் - அறத்துப்பால், வெகுளாமை - 306)

எனக் குறிப்பிட்டார்.

சினத்தால் வரும் துன்பங்கள் :

கோபம் முகத்தில் தோன்றும் சிரிப்பைக் கொல்லுகிறது. மனத்தில் தோன்றும் மகிழ்ச்சியைக் கொல்கிறது. ஆகலின் நம்மையே திட்டமிட்டு வீழ்த்தும் உட்பகைதான் சினம் எனக் கூறலாம்.

ஞானசம்பந்தர் "சீ! சீ! சினமே தவிராய்" எனக் கோபத்தை வெறுத்து ஒதுக்குதலைக் காணலாம்.

கோபத்தால் உடல் வாதைப்படுகிறது; மனம் வாதைப் படுகிறது; இறுதியில் உயிர் வாதைப்படுகிறது.

கோபத்தை அகற்ற எளிய முறைகள் :

கோபத்தை அகற்ற எளிய முறைகள் உள்ளன. கோபம் கொள்பவர்கள் அவர்களது அறியாமையின் காரணமாகக் கோபப் படுகிறார்கள் என உணரும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொண்டால் நமக்குக் கோபம் தோன்ற வாய்ப்பு இல்லை. கண்ணகி யும் கோவலனும் மதுரைக்குச் செல்லும் வழியில் அவர்களைக் கீழ் மக்கள் சிலர் ஏளனம்செய்கின்றனர். அதைக்கேட்ட கவுந்தியடிகள் கோபப்பட்டு அவர்களை நரிகளாகப் போகுமாறு சபித்து விடுகிறார். அதைக் கண்ட கோவலன் அவர்களது அறியாமை இது என உணர்ந்து மன்னிக்குமாறு வேண்டுகிறான்.

" நெறியின் நீங்கியோர் நீரல செயினும்
அறியாமை என்று அறிதல் வேண்டும் " — சிலப்பதிகாரம்

எனக் கோவலன் வேண்டி நின்றான். ஏசுபிரான் சிலுவையில் அறையப்பட்டபோது, " அறியாமையினால் அவர்கள் இப்பிழை யைச் செய்கிறார்கள். இவர்களை மன்னியும் " எனத் தேவனிடம் வேண்டுகிறார். மனம் பக்குவப்பட்டால் கோபம் வராது என்பதை இவை விளக்கி நிற்கின்றன.

சினம் கொண்டு சொல்லிய சொற்கள், பிறர் மீது வீசிய கற்கள். பேசாத வார்த்தைக்கு நாம்எஜமானன்; பேசிய வார்த்தை நமக்கு எஜமானன். நாம் நம் செயலால் தேடும் நண்பர்களைக் காட்டிலும் சொல்லால் அதிகப்பகைவர்களைத் தேடிக் கொள்கிறோம். ஆதலின் " எப்போதும் பயனுடைய சொல்லையே சொல்லுக ", " ஒரு சொல் போதுமானால் இரு சொற்களை வீணாக்குவதில்லை " என ஒவ்வொருவரும் கொள்கை வகுத்துக் கொண்டால் இன்ப வாழ்விற்கு அஃது எல்லைக்கோடாக அமையும். நினைவு கொள்ளுங் கள் – " மோனம் என்பது ஞான வரம்பு " " யாகாவா ராயினும் நாகாக்க " என்பதை வேத வாக்காகக் கொள்ளுங்கள்.

கோபம் தீய சித்தனைகளைப் பிறப்பிக்கும் தாய் என்பதைமறந்து விடாதீர்கள். ஆதலின் வலியவர், சமமானவர், எளியவர் ஆக யாரிடத்தும் சினம் கொள்ளாமல் காப்பதே அறிவுடைமை என நினையுங்கள்.

கோபம் என்னும் நெருப்பு, மனத்தை மட்டும் சுட்டு எரிப்பது அன்று; நம் இனத்தையே சுட்டு எரிப்பது.

" தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம் "

என்றார் வள்ளுவர். சினத்தை ஒழிக்க இன்சொல் கூறுங்கள். இரும்புக் கடப்பாரைக்கு நெக்குவிடாத பாறை பசுமரத்தின் வேருக்கு நெக்குவிடவில்லையா? யானையைக் கொன்று உருவிச் செல்லும் அம்பு, பஞ்சில் பாய்வதில்லையே. வன்சொல்லுக்கு இருக்கும் ஆற்றலைக் காட்டிலும் இன்சொல்லுக்கு ஆற்றல் அதிகம்.

உள்ளன்புடன் பிறர்க்கு உதவி செய்யுங்கள். அது மனத்திற்கு மகிழ்ச்சியைத் தரும்; கோபத்தைத் தோன்றவிடாது. கால்களில் தோல் செருப்பைப் போட்டுக் கொண்டால் அது பூமியின் பரப்பு முழுவதும் தோல்போர்த்தியதற்கு ஒப்பாகும். அதுபோல மனத்தில் மகிழ்ச்சியை வைத்துக் கொண்டால் வாழ்வெல்லாம் மகிழ்ச்சி பொங்கும்; கோபம் மறையும்.

பிரச்சனைகள் எழும்போது மனம் உணர்ச்சி வசப்படுகிறது; உணர்ச்சி வசப்படும்போது கோபம் தோன்றுகிறது. கோபம் தோன்றும்போது நல்லது, கெட்டது உணராமல், தீரவிசாரிக்காமல் செயல்பட்டு விடுகிறோம். ஆதலின் பிரச்சனைகளை அமைதியாக, நிதானமாக நோக்கிக் கால இடைவெளி தந்து, சிந்தித்து முடிவு செய்ய, சுய பலவீனங்களை அறிந்துகொண்டு அச்சூழலில் வாயை மூடிக்கொண்டு இருக்கப் பழகுங்கள்.

அட்டாங்க நமஸ்காரம்

வடக்கே சிரத்தை வைத்து மார்பு பூமியிலே படும்படி, வலக் கையை முன்னும், இடக்கையைப் பின்னும் நேரே நீட்டிப் பின் அம்முறையே மடக்கி வலப்புயமும், இடப்புயமும் மண்ணிலே பொருந்தும்படி, கைகளை அரையை நோக்கி நீட்டி, வலக்காதை முன்னும், இடக்காதைப் பின்னும், மண்ணிலே பொருந்தச் செய்து நமஸ்காரம் செய்தல் வேண்டும். பொதுவாகத் தலை, கை இரண்டு, செவி இரண்டு, புயம் இரண்டு, முகவாய் என்னும் எட்டு உறுப்புக்களும் நிலத்திலேதோயும்படி வணங்குதல் முறை. அப்படி வணங்கும் போது நம் பாவங்கள் பூமியில் படிந்துவிடும்.

பஞ்சாங்க நமஸ்காரம்

தலை, கை இரண்டு, முழந்தாளிரண்டு என்னும் ஐந்து உறுப்புக்களும் நிலத்திலே தோயும்படி வணங்குதல் பஞ்சாங்க நமஸ்காரம். நமஸ்காரம்மூன்று, ஐந்து, அல்லது ஏழு முறைசெய்தல் வேண்டும். நமஸ்காரம் செய்யுமிடத்துத் தெற்கே கால் நீட்டல் வேண்டும்.

வேதம் குறிப்பிடும் ஸரஸ்வதி நதி உண்மையே!

ஸரஸ்வதி நதி என்பது பல நூற்றாண்டுகளாக சர்ச்சைக்குரியதாக இருந்துவந்தது. 'ஸரஸ்வதி' என்று உண்மையில் ஒரு நதி இருந்ததா? அல்லது எப்போதாவது இருந்து மறைந்ததா? இந்தக் கேள்விக்குத் தார்பாலைவனம் அருகே இன்றுள்ள மணல்குன்றுகள் பதில்தருகின்றன.

"நதிகளின் தாய்" என ரிக்வேதம் வர்ணிக்கும் மிகப் பெரிய நதியான ஸரஸ்வதி நதி ஓடி மறைந்த ஒரு சில இடங்களைப் பெரும் முயற்சியின் காரணமாக, ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

20 தொல்லியல் நிபுணர்கள், புவியியல் நிபுணர்கள், பூகோள, சரித்திர அறிஞர்கள் கொண்ட "ஸரஸ்வதி நதி கண்டுபிடிப்பு ஆராய்ச்சி அமைப்பு" என்ற அமைப்பு 1985 ஆம் ஆண்டு நவீன வசதிபடைத்த சாதனங்கள், செயற்கைக்கோள் உதவியுடன் இந்த ஆராய்ச்சியைத் துவக்கியது.

அம்பாலா மாவட்டத்தில் சிவவாலிக குன்றுகள் இடையே ஆதிபத்ரி என்னும் இடத்தில்தான் ஸரஸ்வதி நதி தோன்றியதாகக் கூறப்படுகிறது.

ஆதிபத்ரியிலிருந்து குஜராத்தில், சோமநாத் வரை 3500 கி.மீ. தொலைவிற்குப் பிரபல தொல்லியல் அறிஞர் காலஞ்சென்ற டாக்டர் வி. எஸ். வாகா கர் தலைமையில் இந்த அமைப்பு ஆராய்ச்சியை நடத்தியது.

3000 கி. மீ. தூரம் முழுவதும் 150 சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் உள்பட, பல இடங்களில் அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்டது.

ஸரஸ்வதி நதிக் கரையில் மிகப் பெரிய நாகரிகம் அமைந்துள்ளதை இந்த அமைப்புக் கண்டுபிடித்துள்ளது.

வேதத்தில் சொல்லப்பட்டுள்ள ஸரஸ்வதி நதிபற்றிய வர்ணனையை இந்தக் கண்டுபிடிப்புகள் உறுதிப்படுத்துகின்றன.

பாகிஸ்தானில் ஸரஸ்வதிக்கு சக்கர் என்று பெயர். இதன் உப நதியாக சட்லெஜ் இருந்ததையும், இதுபோல இன்னும் பல உப நதிகள் இருந்ததையும் நவீன கருவி மூலம் கண்டுபிடித்துள்ளனர். ஆனால் முன்பு சென்ற வழிக்கு மாறாக இன்று சட்லெஜ் செல்கிறது.

இதற்கு நிலநடுக்கங்களே காரணம் என்று கூறப்படுகிறது. இதனால் சாக்கர் வறண்டுவிட்டது. சாக்கர் பற்றி செயற்கைக்கோள்மூலமாக ஆராய்ந்தபோது, ஒரு ஆச்சரியமான உண்மை தெரியவந்துள்ளது. பஞ்சாபில் சத்ரான என்ற இடத்திலிருந்து பாகிஸ்தானில் மாரோட் என்ற இடம் வரை ஸரஸ்வதி நதியின் அகலம் 8 கி. மீ. ஆக இருந்திருக்கிறது!

இன்று தார்ப் பாலைவனமாகக் காட்சியளிக்கும் வடமேற்கு ராஜஸ்தான் 4500 ஆண்டுகளுக்குமுன்பு பச்சைப்பசேலெனப்பசுமை பூத்திருந்ததாகத் தனது ஆராய்ச்சியின் முடிவில் டாக்டர் வாகங்கர் தெரிவித்திருந்தார்.

3500 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த ஹரப்பா நாகரிகம் ஸரஸ்வதி நதிக்கரையில்தான் அமைந்திருந்தது. வேதஅறிஞர்கள் இங்குதான் வே[illegible]ாழ்வு கண்டனர்.

பத்ம புராணக் கதை :

மேற்குக் கடல் நோக்கி வடவாக்னியைக் கொண்டுசெல்ல பிரும்மா தனது மனைவி ஸரஸ்வதியைப்பணித்தார். ஸரஸ்வதிதேவி நதி வடிவம் தாங்கி மாதங்க மாமுனிவர் ஆசிரமத்தில் உள்ள பலாசமரத்திலிருந்து புறப்பட்டாள். அப்போது விஷ்ணுபகவான் தோன்றி, நதி நீரை வடவாக்னி உறிஞ்சிவிடும் அபாயம் உள்ளதாகக் கூறினார். இது பத்ம புராணம் கூறும் கதை. ஸரஸ்வதிநதி வறண்டுவிடும் என்பதைப் புராணம் இவ்வாறு வர்ணிப்பதாக இந்த அறிஞர்கள் கூறுகின்றனர்.

மகாபாரதம் :

நிஷாத ராஜ்ஜியத்தின் வாயிலில் (இன்றைய ராஜஸ்தானில் சிர்சாநகரம்) விநாசனம் என்ற இடத்தில் ஸரஸ்வதிநதி மறைந்து விட்டதாக மகாபாரதம் கூறுகிறது.

இந்த நதி மறைந்துவிட்டவுடன், நதி ஓடிய பகுதி பெரிய சாலையாக மாறிவிட்டது. வட இந்தியாவையும், மேற்குக் கடற்கரையையும் இணைப்பதாக அமைந்துவிட்டது.

அலகாபாத்தில் உள்ள பிரயாகையில் ஸரஸ்வதி நதி கலப்பதாகக்கூறப்படுகிறது, 'த்ரிவேணிசங்கமம்' என்று கூறப்படும் இங்குக் கங்கையும், யமுனையும் கலக்கின்றன. ஸ்ரஸ்வதி நதி அந்தர்வாஹினியாகக் கலக்கின்றது. ஆனால் ஸரஸ்வதி நதி இப்பகுதியில் வரவில்லை என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

— நன்றி, தினமணி (மதுரை) 16—10—89

மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள்

வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்.,
தருமபுரம்.

(மலர் 48, இதழ் 12, பக்கம் 624 இன் தொடர்ச்சி)

தோள் நோக்கம் ;

ஆண்மகனின் ஆண்மையழகு அவன் தோளாற்றலால் வெளிப்படும். சீவகன் தத்தையின் பொருட்டுத் தனியாக நின்று போராடி வென்றவிபரம், தான் சொல்லக் கேட்டுக் கலுழவேகன் மகிழ்ந்தான். எண்ணுநர்கள் சாயத் தோள் நோக்கிய உன் வெற்றியை வெள்ளி மலையே கொண்டாடுகிறது - எனக் கலுழவேகன் ஓலையையும் சீவகனுக்கு அனுப்பி வைத்தான். தோள் நோக்கிய செயல் - மகிழ்வின் அடையாளம் எனக் குறிக்கப்படுகிறது சிந்தாமணியில்,

> எண்ணுநர்கள் சாயவெனத் தோளிரண்டு நோக்கி
> வெள்ளிமலை முழுதுங் கொடி எடுத்தது. (சிந். 847.)

பின்னேயும் ஒரு இடத்தில் 'கோவனும் மக்களும் குளிர்ந்து தோள் நோக்கினார்' - சிந். 1843 என்றெழுதினார்.

கம்பர் சூர்ப்பனகை அவமானப்பட்டு வந்தபோது - இராவணனிடம் இப்படிக் கூறுவதாகக் காட்டினார்.

> உரன் தெரித்துவிழ என்னை உதைத் துரட்டி மூக்கரிந்த
> நரனிருந்து தோள் பார்க்க நான் கிடந்து புலம்புவதோ.
> (கம். 2840.)

திசைநோக்கித் தொழல் :

காதலர் நெஞ்சக்காரராக இருக்கும்போது அந்நிலையே ஒரு சுகந்தமாகும். அன்பிற்குரியவர் இருக்கும் திசைநோக்கி வணங்கி மகிழும் இயல்பும் பார்க்கக் கூடியதே. சிந்தாமணியில் - சீவகன் தன்நலம் குறித்து உசாவிய மாமன் இருந்த திசைநோக்கி வணங்கினான் - என வருகிறது.

> மன்பெரிய மாமனடி மகிழ்ந்து திசைவணங்கி. (சிந். 849;)

கம்பர் பரதனின் இணையில்லாப் பக்திநிலையை இதே உத்தியில் அமைத்துக் காட்டினர். பரதனின் வேடமும், செயலும் குகனை நிலைகுலைய வைத்தது. அவன் பரதனைக் கண்ட நிலையை,

நம்பியும் என் நாயகனை ஒக்கின்ருன் அயல்நின்ருன்
தம்பியையும் ஒக்கின்ருல் தவவேடம் தலைநின்ருன்
துன்பமொரு முடிவில்லை திசைநோக்கித் தொழுகின்ருன்.

என்று (கம். 2332) சுட்டுகிருர். இராமனிருந்த திசையிலேயே பார்வை பதித்துநின்ற பரதனை நம்மாலும் மறக்க முடியவில்லை.

ஆசைமாக்களும், அந்தணர்களும் :

தானம் செய்வது - பாபம் கழிவதற்கு. மனிதர்கள் - நம்பிக்கை முயல்வை என்ற இரண்டினுலும் (இருகை கொண்டு) தானமும், தருமமும் கைகூடப்பெறுகிருர்கள். யானை தும்பிக்கை (கை - என்ற பெயரில் மட்டும்) மட்டுமே உடையதால் யானைக்கில்லை தானமும் தருமமும் - என்ற பழமொழியும் கூட வழங்கலாகிறது.

யார்யாருக்குத் தானம்செய்ய வேண்டும் என்பதைச்சிந்தாமணி காட்டுகிறது.

ஆசை மாக்களோ டந்தணர் சொன்னென
மாசை மாக்கடல் மன்னவன் ஆடலின். (சிந். 911)

ஆசை என்பதற்குத் திசை என்பது பொருள்.

'அனங்காச்பாசனை ஆசைதொரு முற்று' வாலி பூசைசெய்வான் என்பன்தக் கம்பர் தாரை வழியாகக் குறிப்பிட்டார். பல்வேறு திசைகளிலிருந்து பிழைக்கவந்த இவர்கள் ஆதுலர் என்றசொல்லாலும், தமக்கென ஒருதிசை இல்லாத நிலையில் இவர்கள் திக்கற்றவர்கள் என்ற சொல்லாலும் குறிக்கப்பெறுவர். இவர்களுக்குக் கொடுப்பது உண்மையில் புண்ணியம் தருவதாகும். அந்தணர்கள் பிறப்பால் உயர்ந்தவர்கள். வேதமோதி ஒழுக்கம் தவருத அவர்களுக்குக்கொடுப்பதால் - பலன் (ஆசி) கிடைக்கும். தேவர் இவர்கள் இருவரையும் ஒருசேரக் கூறி-புண்ணியப் பலன்பெற வழிகாட்டினர் என்று கொள்ளல் வேண்டும்.

இன்னெரு பாடல் - கொடுப்போர் தம் ஆசைதீரக் கொடுக்கும் இயல்பு கூறுவதாகிறது. யானை முதலியவைகளைக் கொடுத்தும் அமைதியடையாமல் இரவலர்களின் பாதங்களில் பொன்னை மலையாகக் குவித்தனர் என்பது அப்பாடல் செய்தி.

உவாமுத லிரவலர்க் குடைமை யுய்த்தவர்
கவான்முதற் கூப்பிய கனக மாழையால்
தவாவினை யடைகரை தயங்கு சிந்தைநீர்
அவாவெனு முடைகட லடைக்கப் பட்டதே. (சிந். 913.)

இன்னொரு இடத்தில் சென்று 'இலன்' என்று உரையாதவாறு கொடுக்கவேண்டும் என்பது குலனுடையான் கோட்பாடென வள்ளுவர் இதற்கு வழிகாட்டியுள்ளார்.

கம்பர் கருதியது என்ன ?

சீதை அசோகவனத்தில் இருந்தபோது இராமனின் குணநலன்களை - வடிவழகை நினைந்து புலம்பினாள். அவற்றுள் ஒன்று இது,

பரித்த செல்வம் ஒழியப் படரும் நாள்
அருத்தி வேதியற்கு ஆன்குலம் ஈந்து அவன்
கருத்தின் ஆசைக் கரை இன்மைகண்டு இறை
சிரித்த செய்கை நினைந்தழும் செய்கையாள். (கம். 5094.)

இப்பாடலில் சில பாடபேதங்கள் உண்டு. அவர்கருத்தின் என்பதும், ஆசைக்களவின்மை என்பதும் காணக்கூடியவை. பதப்பிரிப்பில் ஆசைக்களவின்மை ஆசைக்கு அளவின்மை - எனப் பிரிக்கப்பட்டு அந்தணர்கள்பால் ஒரு குறையமைய இடமேற்பட்டது.

சிந்தாமணிக் கருத்திற்கும் - பழைய இலக்கியங்களுக்கும் மாறாக இப்படிக் கருதுவது நன்மை தராது.

நயமும் நன்மையும் காண்போம் :

இராமன் காடேகு முன் அந்தணர்களுக்குப் பசுக்களைத் தானம் செய்கிறான். பூழிவெம் கானம் நண்ணவல்லயோ கைகேயி கட்டளையிட்டுள்ளாள். உண்ணும் நீரினும், உயிரினும் மேலாக இராமனை உவக்கும் மக்கள் (அந்தணர்களும்தான்) மனம் என்ன பாடுபடும். அந்தணர்கள் எண்ணம் இப்படி ஓடிற்று. இவன்தரும் பசுக்களின் பயனைக்கொண்டு யாகங்களைச்சிறப்புறச்செய்வோம். அவ்வேள்விப் பயனால் அவன் செல்லும் காடும் மலிய மழைபெறும். இந்த உதவியை நாம் செய்வோம் என்ற அவர்கள் மனத்தெளிவை இராமன் கள்ளமில்லாத அவர்கள் முகக் குறிப்பால் அறிந்து கொண்டான். இறை அப்போது சிரித்தான். ஏன் தெரியுமா! கோசலத்து அந்தணர்கள்போல் குவலயம்முழுதிலும்இருப்பார்களா என்பதை யோசித்துத்தான், சீதைஇப்போது யோசிக்கிறாள். அந்த அந்தண வேடத்தில் வந்து தானே இராவணன் தன்னைக் கவர்ந்தான்! இக் கபட நாடகத்தைக் காகுத்தன் முன்பே அறிந்துதான் சிரித்தானோ என்று எண்ணி நைகிறாள் சீதை.

'அவர் கருத்தின் ஆசைக் களவின்மை கண்டு - இறை சிரித்த செய்கை நினைந்தழுதாள்' - என்பது நயவுரை. இனி நன்மைச் சிந்தனை - இதற்கு 'அவன் கருத்தின் ஆசைக் கரையின்மை' - என்ற பாடம் துணை செய்கிறது. (மூன்றும் அச்சீடு - கம்பன் கழகப் பதிப்பு. 83.)

இதில் தான் சிந்தாமணிக் கருத்து அப்படியே பொதியப் படுகிறது. அளவிறந்த பசுக்களை மேலும் மேலும் அந்தணர்களுக்கு வழங்கிக் கொண்டே இருக்கும் இராமனைப் பார்த்த, அந்தணர்கள் முகத்தில் ஒருகணம் சிரிப்பு ஒளி காட்டியது (இறை - மிகச்சிறிய காலவளவு) காரணம் என்னவாயிருக்கும். தானத்தால் வினைப்பயனை நீக்கிவிட முடியாது. வருவது வந்தே தீரும்-என்ற குறிப்பைத்தான் அவர்கள் சிரிப்பு-அன்று உணர்த்தியதோ-அறியாமல் போனேனே-இராமனைப் பிரியும் விதிவலியை-அவன் செய்த தானத்தால் மாற்ற முடியவில்லை - என்பது உண்மையாயிற்றே - எனச் சீதை நினைந்து அழுதாள்.

"அவன் கருத்தின் ஆசைக் கரையின்மை கண்டு
இறை சிரித்த செய்கை"

அந்தணர்களுடையதாகக் கூறவும் இடமிருக்கிறது பாடலில்.

சிந்தாமணிக் கடலில் கம்பர் முகந்த முத்து - உண்மையில் கருத்தால் மதிப்பிடவும் கூடுவதில்லை - என்ற உண்மை இப்போது நமக்கு விளங்குகிறதுதானே! (வளரும்)

தொட்டுக்காட்டாத வித்தை...

நாம் அறிந்த பழமொழி 'தொட்டுக்காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது' - என்பது. குருமூலமாகக் கல்வி பெறுவதன் அவசியம் உணர்த்துகிறது இது என்று பொதுவாகக் கருதப் படுகிறது. சமயக் கல்வியில் தனித்த இடம்பெறும் தீட்சையினை வற்புறுத்துவது இது என்பது மற்றொரு கருத்து. தீட்சையின்றிக் கண்ணன் செய்த பூசையின் மலர்கள் நிர்மாலியம் ஆகாது என்பதை உபமன்யு முனிவர் அப்பூக்களை மீண்டும் எடுத்துப் பூசித்து-உணர்த்தினர். அடுத்த வரிக்குப் பொருள், திருநீறு ஆசிரியன் கையால் பெறும்போதுதான் நம்மைத் தூய்மையடையச் செய்கிறது. நாமே சாணத்தைச் சுட்டு - உடம்பில் திருநீறாகப் பூசிக்கொண்டால் அதற்குப் பலனில்லை. மந்திரமாக - மருந்தாக - திருவாளன் திருநீற்றைத் திலகவதிஓதிக்கொடுத்த (ஐந்தெழுத்து) போதுதான் திருநாவுக்கரசர் நலம் பெற்றார் என்பதை இங்கே உணரவேண்டும்.

[திருமதி. ப. நீலா.]

கட்டுரை எண். 28.

போதமும் சித்தியும்

டாக்டர். திரு. மு. சிவச்சந்திரன்

சிவஞானபோதத்தின் முதல் நூற்பாவிலுள்ள மூன்றும் அதிகரணம், இருவகைத் தெளிவினைத் தருகிறது. ஒன்று, அநேகசுரவாதிகள் கூறும் தடைக்கு விடையும், பிறிதொன்று, சிவசமவாதிகள் கூறும் தடைக்கு விடையும் ஆகும். ஈசுரன் பலர் என்று கூறுவோர் அநேகசுரவாதிகள்; இறைவனும் உயிரும் முத்தி நிலையில் சமமாயிருப்பர் என்போர் சிவசமவாதிகள். இவர்களின் கருத்திற்கு மறுப்புக் கூறும் நிலையில் கீழ்வரும் வெண்பா சிவஞானபோதத்தில் உள்ளது. முதல் இரண்டு வரிகளில் முதல் மறுப்பும், பின்னிரண்டு வரிகளில் அடுத்த மறுப்பும் உள்ளன.

> "ஒன்றலா ஒன்றால் உளதாகி நின்றவா(று)
> ஒன்றலா ஒன்றில் அவை ஈறுதல — ஒன்றலா
> ஈறேமுதல்; அதனின் ஈறலா ஒன்றுபல
> வாறே தொழும்பாகும் அங்கு."

என்பது அவ்வெண்பா. இதில், "ஒன்றலா,ஒன்று" என்று மூன்றிடங்களிலும் குறிக்கப்படுவது இறையை ஆகும். 'அவை' என்று குறிப்பது இவ்வுலகத் தொகுதியை. "அவை, ஒன்றலா ஒன்றால் உளதாகி நின்றவாறு, ஒன்றலா ஒன்றில் ஈறதல் ஆதலின், அவ் ஒன்றலா ஒன்று எனப்படும் ஈறே முதல்" எனக் கருத்தில் கொள்ளல் வேண்டும். இதுவரை கூறப்படுவது, இறைவனே அதாவது ஈறாக விளங்கும் ஒருவனே முதலாகவும் விளங்குகின்றான்; அவனையன்றிப் பிறிதொன்று இல்லை என்பது. இதனால் அநேகசுரவாதிகளை மறுத்தார். இனிச் சிவசமவாதிகளை மறுக்கின்றார். வெண்பாவில் உள்ள, "அதனின் ஈறலா ஒன்று" என்பது, அக்கடவுள் போல அழிவின்றி நிற்கின்ற உயிர்த் தொகுதி என்னும் கருத்தைத் தருகிறது. அது, 'அங்கு' அதாவது முத்தியில், "பலவாறே தொழும் பாகும்" என்பதனால் பல்லாற்றாலும் முதல்வனுக்கு அடிமையேயாகும் என்றார்.

இங்ஙனம் சிவஞானபோதம் முதல்நூற்பா மூன்றும் அதிகரணம் கூறும் இருவகைக் கருத்துக்களைச் சித்தியார் தெளிவாகவும்,

விரிவாகவும் விளக்குகிறது. இதுவரை (சென்ற இதழ் வரை) அனேகசுரவாதிகளின் கருத்துக்களுக்கு மறுப்புக்கூறும் வகையில் சித்தியார் ஓராற்றான் விளக்கிக் கூறியது. இனி, வரும் பாடலால் சிவசமவாதிகளின் கருத்துக்கு மறுப்புக் கூறுகிறது.

இச்சா ஞானக் கிரியைகள் இறைவனுக்கு இருத்தலைப்போல உயிர்களுக்கும் இருத்தலால் உயிர்களும் இறைவனுக்குச் சமமாகும் போலும் எனில் அது தவறு. உயிர்களுடைய இச்சா ஞானக்கிரியை கள் கேவலத்திலே ஆணவ மலத்தாலே மறைக்கப் படுதற்குரிய தன்மையும் சகலத்தில் கன்மத்துக்கு ஏற்ப அவை ஏகதேசமாய் விளங்கப்பெற்றுக் கன்மபயனை ஏகதேசமாய் அறிந்து அனுபவிக்கும் தன்மையும் சுத்தத்திலே வியாபக அறிவைப் பெற்று முத்திப் பயனை அனுபவிக்கும் தன்மையும் உடையன ஆதலால் இத்தன்மைகள் இல்லாத இறைவனது இச்சா ஞானக் கிரியைகளோடு இவற்றிக்கு வேற்றுமை பெரிதாகஇருக்கிறது. ஆதலால் உயிர்கள் எந்நிலையிலும் இறைவனுக்குச் சமமாக மாட்டா என்று அருள்நந்தி சிவாசாரியார் கூறுகின்றார். இக்கருத்துக்கள்,

"சீவனும் இச்சா ஞானக் கிரியையால் சிவனை ஒப்பன்
ஆவன் என்றிடின் அநாதிமலம் இவற்றினை மறைக்கும்
காவலன் இவன்செய் கன்மத்(து) அளவினில் கொடுப்பக் [காண்பன்
பாவியாம் புத்தி முத்திப் பயன்கொளும் பண்பிற்கும்."

என்னும் பாடலில் விளக்கப்பெறுகின்றன.

இனி, முதல் நூற்பாவின் நிறைவாகச் சிவஞானசித்தியார், சித்துருவாகிய சத்தி வடிவத்தின் இலக்கணத்தையும் அதனால் உண்டாய பலனையும் கூறுகிறது.

முதல்வன், இச்சா ஞானக்கிரியை எனும் மூன்றனுள்ளே ஞானமே ஆய் வியாபரிக்கும் பொழுது சிவன் எனவும் கிரியையாய் வியாபரிக்கும்பொழுது சத்தி எனவும் ஞானமும் கிரியையும் ஒத்து வியாபரிக்கும்பொழுது சதாசிவன் எனவும் ஞானம் குறைந்து கிரியை மிகுந்து வியாபரிக்கும்பொழுது மகேசுரன் எனவும் ஞானம் மிகுந்து கிரியை குறைந்து வியாபரிக்கும்பொழுது சுத்த வித்தை எனவும் பெயர்பெறுவான். இந்நிலையில், இலயம், போகம், அதிகாரம் எனப்படும் மூன்று அவத்தைகளையும் அவ்வவத்தை களுக்குச் சுத்த தத்துவங்களையும் ஆதாரமாக உடையன் ஆவான்.

மேலும் சுத்தவித்தை, மகேசுவரம், சதாசிவம், சத்தி, சிவம் எனும் ஐந்தும் சுத்த தத்துவங்களாம். இவை, முதல்வனுக்குச் சுதந்திர வடிவங்களாம். இவை, அழிவற்று அநாதியாய் நிற்பனவாம். கால தத்துவத்தைக் கடந்து நிற்பன இவை ஆதலின் தோன்றும் முறைமையும் கூறப்படுவதில்லை. எனினும் முன்பின்னாக நிகழும் சக்திகளின் செயல் வேறுபாடு பற்றி அவற்றின் நத் தோற்றம் கூறப்படுவதுண்டு. இக்கருத்துக்கள் அனைத்தும்,

"ஞானமே ஆனபோது சிவன்; தொழில் ஞானம்; ஒக்கின்
ஈனமில் சதாசிவன்; பேர்ஈசனும் தொழிலது ஏறின்;
ஊனமேற் கிரியை வித்தை; உருத்திரன்; இலயபோகம்
ஆனபேர் அதிகாரத் தோடு அதிகாணத்தன் ஆமே."

"வித்தையோ(டு) ஈசர் சாதாக்கியம் சத்தி சிவங்கள் ஐந்தும்
சுத்த தத்துவம் சிவன்தன் சுதந்திர வடிவமாகும்
நித்தம் என்றுரைப்பர் காலநீங்கிய நிலைமையாலே
வைத்திலர் முற்பிற்பாடு வருவித்தார் கருமத்தாலே."

என்னும் பாடல்களில் கூறப்பெறுகின்றன.

அடுத்து, இறைவன் இங்ஙனம் பேத வடிவங்கள் எடுத்தலினால் விகாரப்படுவானோ என்னும் வினவிற்கு விடை பகர்கின்றார். ஒருவனே இராவணன் முதலிய பல வேடங்களை ஏற்று நடித்தான் ஆயினும் அதனால் அவன் தனது தன்மையில் மாறுபடாததுபோல இறைவனும் அருவம், உருவம், அருவுருவம் என்னும் இப்பேத வடிவமெல்லாம் பெறினும் விகாரப்படமாட்டான். ஏனெனில், இப்பேத வடிவமெல்லாம் சத்தி வடிவங்களாம் ஆதலின், எனினும் சிவமும் சத்தியும் மரமும் காழ்ப்பும் (வயிரமும்) போலப் பிரிவின்றி யிருப்பர் என்பதையும் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

"ஒருவனே இராவணாதி பாவகமுற்றுற் போலத்
தருவன் இவ்வுருவமெல்லாம் தன்மையும் திரியானாகும்;
வரும் வடிவமெல்லாம் சத்தி; சத்திதான் மரமும் காழ்ப்பும்
இருமையும் போல மன்னிச் சிவத்தினோடு இயைந்து நிற்கும்"

என்னும் பாடல் இக்கருத்தைத் தருகிறது.

(தொடரும்)

அபிடேக பலன்

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம்.ஏ.

தருமபுரம்.

சிவபிரானுக்கு மிக உகந்த உபசாரங்களில் ஒன்று அபிடேகம். இதனைத் தமிழில் திருமுழுக்கு என்பர். 'சிவன் அபிடேகப் பிரியர், திருமால் அலங்காரப் பிரியர்' என மக்கள் வழக்கில் வழங்கும் பழமொழியாலும் இதனை அறியலாம். சிவாகமங்களில் சிவபிரானுக்கு விதித்துள்ள அபிடேகப் பொருள்களையும் அவற்றின் பயனையும் ஆறுமுகநாவலர் சைவ வினாவிடையிலும் சிதம்பரநாதமுனிவர் நடராஜ சதகத்திலும் விளக்கியுள்ளனர்.

தேவாரத் திருமுறைகளில் இறைவனுக்கு நாம் செய்விக்கும் அபிடேகப் பொருள்களையும், அவ்விறைவன் அவ்வபிடேகத்தினைக் கருணையோடு ஏற்று அருள் புரிதலையும் பலபாடல்களில் காணலாம்.

"பாலினால் நறுநெய்யால் பழத்தினால் பயின்றாட்டி
நூலினால் மணமாலை கொணர்ந்தடியார் புரிந்தேத்த"

"தடங்கொண்டதொர் தாமரைப் பொன்முடி தன்மேல்
குடங்கொண்டு அடியார் குளிர்நீர் சுமந்தாட்ட"

"பாலொடு நெய்தயிரும் பயின்றாடிய பண்டரங்கள்"

"ஆடினாய் நறுநெய்யொடு பால் தயிர்"

எனத் திருஞானசம்பந்தரும்,

"ஆமலி பாலும் நெய்யும் ஆட்டி அர்ச்சனைகள் செய்து"

"பாலினொடு தயிர்நறுநெய் ஆடினார் காண்"

"நெய்யினொடு பால் இளநீர் ஆடினான் காண்"

"பாலோடு நெய்தயிர்தேன் ஆடி கண்டாய்"

எனத் திருநாவுக்கரசரும்,

இக்கட்டுரை; திருமுல்லைவாயில் திருக்கோயில் மண்டலாபிஷேக விழாவில் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கமாகும்.

"நெய்யும் பாலும் தயிரும் கொண்டு
நித்தம் பூசனை செய்யலுற்றால்"

"தேன் நெய் பால் தயிர் ஆட்டுகந்தானே"

"நறுநெய் தயிர் பால் அஞ்சுங்கொண்டாடிய வேட்கையினர்"

எனச் சுந்தரரும் அபிடேகச் சிறப்பைக் கூறியுள்ளனர்.

சிவபிரானுக்குப் பால் அபிடேகம் செய்து அருள்பெற்ற சண்டேசர் வரலாற்றுச் செய்தியைப் பல தேவாரப் பாடல்கள் விவரிக்கின்றன.

பஞ்சகவ்யம் எனப்படும் ஆனைந்து பெருமானுக்கு மிக உகப்பான அபிடேகம் என்பதை,

"ஆனிற்பொலி ஐந்தும் அமர்ந்தாடி"

"ஆனிலஞ்சினர் ஐந்தும் ஆடுவர்"

"ஆனிடை ஐந்தும் வைத்தார்
ஆட்டுவார்க்கு அருளும் வைத்தார்"

"ஆக்கள் ஏறுவர் ஆனைந்தாடுவர்"

"ஆனைந்தும் ஆடினான் காண்"

என்பன முதலிய தேவாரத் தொடர்களால் அறியலாம்.

இறைவனுக்குச் செய்விக்கும் இத்தகைய அபிடேகங்களால் நமக்கு நன்மைகள் பல விளைகின்றன. இறைவன் சந்நிதியில் ஆலயங்களில் சிவாசாரியார் தீர்த்தப் பிரசாதம் வழங்கும்போது, 'காலமல்லாத காலத்தில் மரணம் உண்டாவதைத் தடுக்கும் எனவும், அனைத்து நோய்களையும் தவிர்க்கும் எனவும், நாம்பலபிறவிகளில் செய்த பாவங்களை நீக்கும்' எனவும், ஓதிக்கொடுப்பதைக் காணலாம். மேலும் இறைவனுக்கு அபிடேகித்த பஞ்சகவ்யம் முதலியன நம் உடல் தூய்மைக்கு உதவுவதோடு இரத்த அழுத்தம் சர்க்கரை நோய் முதலியவற்றையும் குணப்படுத்தும் ஆற்றல் பெற்றவை என்பதைப் பலரும் ஆராய்ந்து கூறியுள்ளனர். இத்தகைய அபிடேகத்தை மக்கள் முறையறிந்து செய்து பலன் பெறவேண்டும்.

அபிடேகப் பொருள்களில் தலையானது தூயநீர். புண்ணியநதி, கிணறு இவைகளிலிருந்து இறைவனுக்கு அபிடேகநீர் கொண்டு வரவேண்டும். இறைவனது அபிடேகத்துக்குரிய கிணற்று நீரை

ஏனைய உபயோகங்களுக்குப் பயன்படுத்துதல் கூடாது. ஆற்று நீரைத் தூய குடத்தில் நிரப்பி மாவிலை செருகி யானைமேல் இருத்தி மேளவாத்தியங்களோடு ஆலயத்துக்கு எடுத்துவரச்செய்தல் சிறப்பாகும். நதி அருகில் இல்லாத இடங்களில் கிணற்றுநீரைப் பயன் படுத்தலாம். ஆலயங்களில் அபிடேகத்துக்குரிய கிணறு ஈசானத் திசையில் அமைந்து விளங்கும்.

ஆலயக் கருவறையின் அபிடேகநீரை நிரப்பி அதில் பாதிரிப்பூ, தாமரைப் பூ, செங்கழுநீர்க் கோஷ்டம், ஏலம், இலாமிச்சைவேர், வெட்டிவேர், இலவங்கப்பட்டை, சந்தனம், கற்பூரம் ஆகியவற்றுள் இயன்ற பொருள்களை இட்டு வைத்தல் வேண்டும்.

அபிடேகத் திரவியங்கள் எனப்படும் பொருள்கள்:- நல்லெண்ணெய், சந்தனாதித்தைலம், அரிசிமா, நெல்லிமுள்ளித்தூள், மஞ்சட் பொடி, கஸ்தூரி மஞ்சள் பொடி, திரவியப்பொடி, பஞ்சகவ்யம், ரச பஞ்சாமிர்தம், பலபஞ்சாமிர்தம், பசுவின்பால், பசுந்தயிர், பசுநெய், தேன், சர்க்கரை, கரும்பின்சாறு, எலுமிச்சைச்சாறு, நாரத்தைப் பழச்சாறு, தமரத்தைப்பழச்சாறு, மாதுளைச்சாறு, இளநீர், அன்னம், சந்தனக்குழம்பு, பன்னீர் முதலியனவாகும். நாள் தோறும் சிதம்பரம் போன்ற பெரிய ஆலயங்களிலும், மடாலயங்களிலும் இறைவனுக்கு இவற்றை அபிடேகிப்பதைக் காணலாம்.

பாலைத் தாமிர பாத்திரத்திலும், இளநீரை வெண்கலப் பாத்திரத்திலும் ஊற்றிவைத்தல் கூடாது. இளநீரை அபிடேகத்தின் போது முகிழைத் திறந்து அபிடேகித்தல் வேண்டும். நெய் அபிடேகம் செய்யும் போது இளவெந்நீர் அபிடேகம் செய்ய வேண்டும்.

சுவாமி திருமுன் வைக்கப் பெற்றுள்ள மூன்று கிண்ணங்களில் அருக்கியம், பாத்தியம், ஆசமனீயம் என்ற நீர் வகைகள் வைக்கப் பட்டிருக்கும். இவை சுவாமி மேல் தெளித்தற்கும், பாதங்களைத் தூய்மை செய்தற்கும், அருந்துவதற்கும் பயன்படுத்தப்படுவன.

அருக்கியநீரில் - பால், தர்ப்பைநுனி, அக்ஷதை எள், சம்பா நெல்வெண்கடுகு இடப்பெறும்.

பாத்திய நீரில் - வெண்கடுகு, இலாமிச்சை, சந்தனம், அறுகு முதலியன இடப்பெறும்.

ஆசமனீய நீரில் - சாதிக்காய், கிராம்பு, ஏலம், பூலாங்கிழங்கு, சண்பகப்பூமொட்டு, பச்சைக்கற்பூரம் இடப்பெறும்.

சுவாமிக்குச் சாத்தப்பெறும் எண்ணெய் மிக்க தூய்மையோடு ஆட்டி எடுக்கப்பட்டதாயிருத்தல் வேண்டும். எள்ளைத்தூயநீரில் கழுவிக் கையினால் பிசைந்து தோலை அகற்றி உலரவைத்து நாய்-காகம் முதலியன தீண்டாதவாறு காதுகாத்து, கல் செக்கு, புளிய மாச்செக்கு இவற்றில் ஆட்டி எடுக்கப்பட்டதாயிருத்தல் வேண்டும். நல்லெண்ணெயைவிட சந்தனாதித் தைலம் சுவாமிக்கு விசேடமானதாகும். மக்கட்குச் சந்தனாதித் தைலம் தயாரிக்கும் மருத்துவர் சிறிதளவு சுவாமிக்கு அளிக்கவேண்டும் என மருத்துவ நூல்களில் கூறப்பட்டுள்ளன.

சுவாமிக்கு எண்ணெய் சாத்தும்போது குழந்தைக்கு எண்ணெய் தேய்த்தல் போல நிதானத்துடன் சாத்தவேண்டும். எண்ணெயை அபிடேகமாக ஊற்றல் கூடாது.

பஞ்சகவ்யம் - பிரமகூர்ச்சம் என்னும் மேலான அபிடேகப் பொருளாகும். பால் 5பங்கு, தயிர் 3 பங்கு, நெய் 2 பங்கு, கோசலம் 1 பங்கு, கோமயம் கைப்பெருவிரலில் பாதி என்ற அளவில் கலத்தல் வேண்டும். அவ்வாறு கலத்தற்குமுன் 5 [illegible] ங்களில் அவற்றை அமைத்து மந்திர பூர்வமாகப் பூசி[illegible] அபிடேகித்தல் வேண்டும்.

ரச பஞ்சாமிர்தம் - பால், தயிர், நெய், தேன், சர்க்கரை ஆகியவற்றின் கூட்டாகும்.

பல பஞ்சாமிர்தம் மே[illegible]வற்றுடன் [illegible]வாழை, மா, பலாப் பழங்களைச் சேர்க்கும் கூட்டாகும்.

சந்தனக் கலவையில்

கருப்பூரம், புனுகு, ஜவ்வாது, கஸ்தூரி ஆகியவற்றைச் சேர்த்துக் குழம்பாக்குதல் சிறப்புடையதாகும்.

அபிடேக காலத்தில் ஸ்ரீ ருத்ரம், சமகம், புருஷசூக்தம், ஸ்ரீ சூக்தம், பஞ்சசாந்தி, தேவாரத்திருமுறைகள் ஆகியபாராயணங்களையும் நாதசுவரவாத்திய முழக்கத்தையும் செய்விக்க வேண்டும். அம்பாள் ஆலயமாயின் லலிதாத்திரிசதி ஓதச்செய்யலாம்.

அபிடேகக் காட்சியை எல்லோரும் கண்டு மகிழும் வகையில் திரையின்றிச் செய்யலாம்.

அபிடேகத்தை இடைவெளியின்றித் தொடர்ந்து செய்வதே முறையாகும். ஒவ்வொரு பொருள்களின் அபிடேகத்திற்கும் தீபாராதனை செய்வதும், அங்ஙனமின்றிச் சந்தனாபிஷேகத்திற்கு மட்டும் தீபாராதனை செய்வதும் உண்டு.

அபிஷேகத்திற்கு முன் ஸ்நபனகலசம் வைத்தும், ஏகாதசருத்ர கலசம் வைத்தும், 108, 1008 சங்குகளில் அவற்றிற்குரிய திரவியங்களுடன் நீர் நிரப்பியும் பூசித்து அவற்றை சந்தனாபிடேகத்திற்குப் பின் இறைவனுக்கு அபிடேகம் செய்வது சிறப்பானதாகும்.

சங்கில் நிரப்பிய நீர் அமிர்தத்தைவிட மேலானதாதலின் அமிர்தகடமே இலிங்கமாக விளங்கும் திருக்கடவூரில் கார்த்திகை மாதத்தில் நடைபெறும் 1008 சங்காபிடேகம் மிக்க சிறப்புடையதாகப் போற்றப் படுகிறது.

சந்தனாபிடேகத்திற்குப் பின் தாராபிஷேகம், கவ்யசிருங்க அபிஷேகம், சொர்ணாபிஷேகம், ரத்தினாபிஷேகம் முதலியன செய்யப் பெறும்.

ஒவ்வொரு மாதத்திற்கும் சிறப்பாகச் சிவபெருமானுக்குச் செய்ய வேண்டிய அபிடேகத்தையும் அதன் பயனையும் ஆகம நூல்கள் தெரிவிக்கின்றன.

சித்திரை, வைகாசி மாதங்களில் சிவபிரானைத் தூய்மையான வாசநன்னீர் பதினெட்டுக்குடங்களில் கொண்டு நீராட்டுவோர் 30 ஆண்டுகள் சிவபூசை செய்த பயனை அடைவர்.

ஆனி மாதத்தில் வில்வாதித்தைல அபிடேகம் புரிவோர் 50 ஆண்டுகள் சிவபூசை செய்த பயனைப் பெறுவர்.

ஆடிமாதத்தில் நாள் ஒன்றுக்குப் பதினாறு இளநீர் அபிடேகம் புரிவிப்போர் 100 ஆண்டுகள் சிவபூசை செய்த பயனை அடைவர்.

ஆவணி மாதத்தில் நாள்தோறும் 24 படி பசுவின் பால் அபிடேகம்செய்விப்போர் 1000ஆண்டுகள் சிவபூசைசெய்தபயனைப் பெறுவர்.

புரட்டாசி மாதத்தில் நான்குசேர் நல்லெண்ணெயை நாள் தோறும் அபிடேகம் செய்விப்போர் 10, 000 ஆண்டுகள் சிவபூசை செய்த பயனை எய்துவர்.

ஐப்பசி மாதத்தில் பசுநெய் 9 உழக்கு அபிடேகம் செய்வித்து நீலோற்பலம் நெய்தல் வில்வம் ஆகியவற்றால் அர்ச்சிப்போர் இலட்சம் ஆண்டுகள் சிவபூசை செய்த பயனை அடைவர்.

கார்த்திகையில் பஞ்சகவ்ய அபிடேகம் செய்விப்போர் எல்லையற்ற ஆண்டுகள் சிவபூசை செய்த பயனை எய்துவர்

பங்குனியில் பன்னீர் கலந்த சந்தன அபிடேகம் செய்விப்போர் எல்லையற்ற ஆண்டுகள் இன்புற்றிருப்பர்.

அபிடேகம் செய்விப்போர் அறிய வேண்டிய செய்தி ஒன்று உண்டு. மகாதேவராக விளங்கும் சிவபிரானுக்கு அபிடேகம் புரியச்

சேகரிக்கும் பொருள்கள் குறைவின்றி நிறைந்த அளவில் இருத்தல் வேண்டும்.

நடராச சதகம் பின்வரும் அபிடேகப் பொருள்களின் அளவைத் தெரிவிக்கிறது.

வாழைப்பழம் 25, பலாப்பழம் 1, எலுமிச்சை 25, மாம்பழம் 15, மாதுளை 10, நாரத்தை 10, இளநீர் 10, தனிச்சர்க்கரை 3பலம், தேன் 1 உழக்கு, நெய் 1 படி. பஞ்சகவ்யம் குறுணி, பால் 6 படி, தயிர் 12 படி, மஞ்சள் 1 பலம், எண்ணெய் 1 படி.

ஒவ்வொரு மாதமும் வரும் பருவத்தன்று சிவபிரானுக்குப் பின் வரும் பொருள்களால் அபிடேகம் புரிவிப்போர் அவ்வவற்றிற்குரிய பயனை எய்தி இன்புறுவர்.

சித்திரை	—	தமனகலசம் மருக்கொழுந்து	—	கீர்த்தி
வைகாசி	—	சந்தனம்	—	சாலோக்யம்
ஆனி	—	முக்கனி	—	இட்டசித்தி
ஆடி	—	சர்க்கரை பால்	—	சத்துருநாசம்
ஆவணி	—	அதிரசம் சர்க்கரை	—	மகிழ்ச்சி
புரட்டாசி	—	திரட்டுப்பால் பணியாரம்	—	தனம்
ஐப்பசி	—	அன்னம்	—	ஞானம்
கார்த்திகை	—	தீபம்	—	பழிநீக்கம்
மார்கழி	—	நெய்	—	ஆயுள்
தை	—	தேன்	—	ஆரோக்யம்
மாசி	—	கிருதகம்பளம்	—	மகப்பேறு
பங்குனி	—	தயிர்	—	ஆண்சந்ததி

அபிஷேகப் பொருள்களினால் நாம் அடையும் பயன்களைப் பல நூல்களும் பின் வருமாறு தெரிவிக்கின்றன.

தூயநீர் - பரம சாந்தம், எண்ணெய் - இன்பம், பஞ்சகவ்யம்-தூய்மை, பஞ்சாமிர்தம் நெய் - முத்தி, பால் - ஆயுள் விருத்தி, தயிர் - சந்ததி, அரிசிமா - கடன் நிவிர்த்தி, நெல்லி முள்ளி - பிணி நீக்கம், மஞ்சள் - இராஜவசியம், கரும்பு - ஆரோக்யம், தேன் - சுகம், வாழைப்பழம் - பயிர் விருத்தி, வில்வாதி - மகப்பேறு, மாம்பழம் - வசியம், மாதுளை - பகை அகலல், பலா - மகிழ்ச்சி, நாரத்தை - சோக நீக்கம், மந்திரசித்தி, சர்க்கரை - பகை அழிவு, இளநீர் - இராஜபோகம், எலுமிச்சை - எமபயம் போக்கல், சந்தனம் - அரசபதவி, பெருஞ்செல்வம்

அபிடேகத்திற்குப்பின் சுவாமியின் திருமேனியைத் திருவொற்றாடை கொண்டு துடைத்தப்பின் பரிவட்டம்சார்த்தி அலங்கரித்து நிவேதனம் புரிந்து தீபாராதனை புரிவித்து வழிபடல் வேண்டும்.

வெள்ளாளபாளையம்

ஸ்ரீ ஞானசம்பந்த விநாயகர் பதிகம்

திரு. ப. இராமசாமி
வெள்ளாளபாளையம்

நேரிசை

தானந் தவங்கல்வி தாளாண்மை அன்புநிறை
ஆனந்த வாழ்வுந்தந் தாட்கொள்ள — வானந்த
ஞானசம் பந்தவி நாயகனை யிங்குற்றுள்
ஞானசம் பந்தமே நாடு.

கட்டளைக் கலித்துறை

அவனும் அவளும் அதுவும் எனவறி யம்புவியில்
தவனும் தவமும் பரிசும் பரிசு தரவரும்நற்
சிவனும் சிவையும் சிவசண் முகனும் முகில்வணன்மற்
றெவனும் சிவனெனும் ஞானசம்பந்தவி நாயகனே ! 1

பந்தத் தவிரப் பகையிடர் பாறப் பசுத்துவத்தின்
தொந்தங் கழலத் துரிசுதவிர்த்தெமை யாண்டுகொள
வந்தமெய் ஞானசம் பந்தவி நாயக வள்ளலடி
நந்தம் மனத்தி லிருத்திப் பணிந்தருள் நாடுவமே ! 2

நாடும் அறிவும் கலையும் திருவொடு நன்மையெலாம்
கூடும் படியடி யார்களுக் கின்பமே கூட்டுவிக்கும்
சேடும்புகழ்திரு ஞானசம் பந்தவி நாயகனார்
பாடும் பொருளும் பரிசுந் தரவுற்ற பான்மைநன்றே ! 3

நன்றே நினைந்துநான் நன்றே நவின்று நலம்பலசெய்
தின்றே யிறையுணர் வெய்தி மகிழ்ந்திட இன்பவருட்
குன்றேயெனவந்தென் உள்ளத்தும் யான்செய்தகோயிலுள்ளும்
நன்றே யமர்ந்தனன் ஞானசம் பந்தவி நாயகனே ! 4

நாயகன் நாரணன் நான்முகன் ஆயபல் வானவர்க்கும்
நாயக னாகியென் னுள்ளம் நயந்தவன் நல்லருட்குத்
தாயக மாகிநின் றன்பிற் றழைப்பவன் தந்திமுகத்
தூயவன் ஞானசம் பந்தவிநாயகத் தூமணியே ! 5

மணியே மணியின் ஒளியே எனவுளம் மன்னிநின் றென்
பிணியே தவிர்க்கும் பிரணவ மாகிப் பிறங்குமெழில்
அணியே அருண்மிகு ஞானசம் பந்தவி நாயகநின்
பணியே புரியப் பணித்தருள் எற்குன் பதநிழலே ! 6

பணிகொண் டெனக்குள் பாலிக்கும் நின்பொற் பதாம்புயத்தை
அணிகொண்ட அன்பெனும் நாரிற் பிணித்தென் அகத்துவைத்தேன்
திணிகொண்ட ஏரம்ப ஞானசம் பந்தவி நாயக; நன்
மணிகண்ட னேவந்தென் துயர்துண்ட மாக மதித்தருளே ! 7

அருளே தருந்திரு ஞானசம் பந்தவி நாயகனிற்
பொருளே யெனத்தெளிந் தன்பிற் பணிந்தடி போற்றிசெயும்
தெருளே உறுவதிங் கென்றுகொல் என்று திகைப்பதென்னின்
மருளே கெடநினக் கின்றே அருளுவன் மாட்சிமையே ! 8

மாட்சிமை தந்து மனந்தெளி வித்து மலர்த்திருவின்
ஆட்சியை யீந்துவெள் ளம்புயத் தாளின் அருட்கடைக்கண்
காட்சியை நல்கிக் கடைக்கணித் தென்வினைக் கட்டறுத்து
மீட்சிதா ஞானசம் பந்தவி நாயக! விண்ணவனே ! 9

வண்ணவன் விண்ணில் விளங்குஞ் சுடரவன் வேலைநீர்சூழ்
மண்ணவன் நீரவன் காற்றும் அனலவன் மாண்புறுமுக்
கண்ணவன் தன்கழல் ஏத்துவார்க் கின்னருட் கண்ணளிக்கும்
எண்ணவன் ஞானசம்பந்தவி நாயக ஏரம்பனே ! 10

ஏரம்பன் ஈரேழ் உலகுக்கும் முன்னவன் ஏந்தலருள்
கூரம் பலத்துநற் கூத்துகந்தான் அன்பு கூட்டிடவந்
தாரம்பம் அந்தம் நடுவின்றி நின்றடி யேங்களுக்கு
நாரன்பு நல்குமெய் ஞானசம் பந்தவி நாயகனே. ! 11

கணம்புல்லர்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ.,பி.எட்.,

தருமபுரம்

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 5—11—1989 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

கந்தசஷ்டிவிழா நிறைந்தது! அன்று சப்தமி. முதல் ஞாயிறும் இயைகிறது! கந்தசஷ்டி விழா நாட்களில் ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் வழிபாட்டுடன் ஸ்ரீ முருகப் பெருமானுக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தியருளினூர்கள். தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் ஆறு நாட்களும் நியதியாக விரதம் அனுட்டித்தார்கள். ஆண்டாண்டு தோறும் அனுட்டிக்கின்றூர்கள். ஞாயிறன்று காலை சொக்கநாதர் வழிபாடும் திருக்கோயில்வழிபாடும் நிறைந்தது. விரதபூர்த்தியாக ஆதீனத் திருமடத்தில் மாகேசுவர பூசை நிகழ்ந்தது! மதுரையிலிருந்து குருத்தலயாத்திரையாக அன்பர்கள் 100 ஆவது அருளுபதேசக்கூட்டத்தில் கலந்துகொள்ள, பக்தியோடும்சிரத்தையோடும் வந்திருந்தனர். மாகேசுவர பூசை நிறைவாயிற்று. காலை 11-30 அளவில் அன்றைய அருளுபதேசம் தொடங்கிற்று. திருமுறைப் பாராயணமும் தோத்திரமும் நிகழ்ந்தன.

கந்தப் பெருமான் கருணையைத் திருவுளக் குறிப்பாகக் கொண்டருளிய குருமணிகள் முதலில் கந்தசஷ்டிவிழாத் தத்துவங்களை விரிவாக அருளினூர்கள். தீமையை அகற்றி நன்மை செய்த விழா இது எனக் குறிப்பிட்டார்கள். அறுமுகச் செவ்வேளுக்கும் சூரபதுமனுக்கும் நிகழ்ந்த யுத்தம் வெற்றி தோல்வி என்றறிலை இல்லாமல் தீமை நீக்கி ஆட்கொண்டருளிய திறமாக அமைந்த பாங்கினைச் சுட்டினூர்கள். தொடர்ந்து மாதச் சிறப்பு நாட்கள் பற்றிக் குறிப்புக்கள் நல்கினூர்கள்.

திருத்தொண்டர் புராண வரிசையில் - அன்றைய உபதேசம் கணம்புல்ல நாயனூர் பற்றியது. ''கறைக்கண்டன் கழலடியே காப்புக் கொண்டிருந்த கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்'' என்பது திருத்தொண்டத் தொகை. கறைக்கண்டன்-

விடமுண்ட கண்டனாகிய சிவபெருமான். சிவபெருமானின் கழலடியையே காப்பாகக் கொண்டவர் கணம்புல்லர். "கறைக் கண்டன் கழலடியே காப்புக்கொண்டிருந்த கணம்புல்லநம்பிக்கும்" என்றும் "கறைக்கண்டன் கழலடியே காப்புக் கொண்டிருந்த காரிக்கும்" எனவும் இவ் அடைமொழியை இரண்டிடத்தும் விரித்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும் - இவ்வாறு பொருள் சிறப்புத் தோன்ற இடையே உரை விளக்கம் அருளினார்கள். கணம்புல்லர் - காரணப் பெயர். இது இவர்தம் தொண்டுச் சிறப்பை ஒட்டி அமைந்த திருப்பெயர். நம்பி-ஆடவருள் சிறந்தார் என்னும் பொருளது. இவர் திருவிளக்குத் தொண்டாற்றிய சிறப்புடையவர்.

கணம்புல்லர் வட வெள்ளாற்றின் தென்கரையில் அமைந்த இருக்கு வேளூர் என்னும் பதியினர். வெள்ளாறு சோழநாட்டின் வடக்கு எல்லையாக அமைந்தது. பரங்கிப்பேட்டையில் கடலில் சங்கமிப்பது. தென்வெள்ளாறு என்பதும் ஒன்றுண்டு அது மதுரை மாவட்டத்திற்கும், தஞ்சை மாவட்டத்திற்கும் எல்லையாக ஓடி மீமிசலில் கடலில் கலக்கிறது. இருக்கு வேளூர் தற்காலத்தில் பேளூர் என வழங்கப்பெறுகின்றது. விருத்தாசலம் – சேலம் இருப்புப்பாதையில் ஆற்றூருக்குத் தெற்கே 7 கி. மீ. தொலைவில் இருப்பது. இவ்வூர் பச்சைமலையின் வடசாரலில் அமைந்துள்ளது. இத்தலத்தில் வாழ்ந்த கணம்புல்லர் பெரும் செல்வர்; பெருங்குடி மக்களின் தலைவர்; உயர்குணசீலர்; "மெய்ப்பொருள் ஆவன ஈசன் கழல்" - எனக் கறைக்கண்டன் கழலடியே காப்பாகக் கொண்டிருந்தவர்.

" செல்வத்துப் பயனே ஈதல் " என்பது நம்முன்னோர் கண்ட நெறி. கணம்புல்லர் " தாவாத பெருஞ் செல்வம் தலைநின்ற பயன் இது " என்று ஒருநெறி பற்றினார். அது திருவிளக்குத்தொண்டு. சிவபெருமான் திருக்கோயிலில் திருவிளக்கு இடுவார். இத்தொண்டு இயற்றுவதோடு இறைவன் திருப்புகழை நாவாரப் பரவியும் மகிழ்ந்தார்.

இங்ஙனம் திருத்தொண்டு புரிந்த நாயனாரின் செல்வம் சிறிது சிறிதாகக் குறைந்தது; நாளடைவில் வறுமை வந்து எய்தியது. இருக்கு வேளூரை விட்டு அகன்றார். திருத்தில்லை அடைந்தார். தில்லைநகர் மணி மன்றுள் ஆடுகின்ற சேவடிகளை அன்புடன் இறைஞ்சி அத்தலத்திலேயே தங்கித் தொண்டு புரியக் கருதினார். அத்தலத்தில் திருப்புலீச்சரம் என்ற தில்லைத்திருக்கோயிலில் திருவிளக்குப்பணி தொடங்கினார். குருமணிகள் அன்பர்களின் ஐயம் அகல ஒருகுறிப்பு அருளிச்செய்தார்கள். சிதம்பரத்தில்

அனந்தீசுவரம் என்ற திருக்கோயில் உண்டு; இது பதஞ்சலி வழிபட்டுப் பேறுபெற்றது. திருப்புலீச்சரம் என்னும் தில்லைப்பெருங் கோயில் வியாக்கிரபாதர்வழிபட்டது. வியாக்கிரபாதர் வழிபட்ட திருப்புலீச்சரத்தில் கணம்புல்லர் திருவிளக்குத் தொண்டு புரிந்தார் - இங்ஙனம் தெளிவுபடுத்தி அருளினார்கள்.

இவ்வாறு, திருப்புலீச்சரத்தில் தொண்டு புரிந்து வருநாளில் சிறிதே இருந்த செல்வமும் ஒழிந்தது. பொருள் வேண்டிப் பிறர் பால் சென்று இரப்பது இழிவுஎன அஞ்சினார். 'கணம்புல்' என்னும் ஒருவகைப் புல்லை அரிந்து எடுத்து வந்து விற்றார். தன் உழைப்பால் பொருள் ஆக்கினார். கணம்புல் என்பது வீடு வேய்வதற்குப் பயன் படுவது. விசுவாமித்திரப் புல் போன்றது. நாணல் வகைகளுள் ஒன்று-என இப்புல்வகை பற்றிக் குறிப்பிட்டருளிப் புராணத்தைத் தொடர்ந்தார்கள். கணம்புல்லினை விற்றுக் கிடைத்த விலைப் பொருள் கொண்டு திருவிளக்குப் பணியை முதல் யாமம் குறை யாமல் நியதியோடு செய்தார். இங்ஙனம் இவர் கணம்புல் விற்றுத் திருவிளக்கிட்டமையால் கணம்புல்லர் என்னும் பெயர் உண்டா யிற்று. நிலையானது இறைபணியே எனக் கருதித் தன் உழைப்பால் திருப்பணி செய்த சீர்மையினர் இவர்.

கணம்புல்லர் மெய்வருந்தக் கணம்புல் அரிந்து எடுத்து விற்று வரும் நாளில் அரிந்து வந்தபுல் ஒருநாள் எங்கும் விலைபோகவில்லை. திருவிளக்குப்பணி முட்டுப்படுமே எனக் கருதினார்; பணியைக் கை விடல் ஆகாது என்ற உறுதி பூண்டார்; அப்புல்லினையே விளக்காக எரிக்க எண்ணினார்; புல்லினைத்திரியூட்டி அழகியவிளக்காக எரித்தார். ஆனால், வழக்கம்போல் முதல்யாமம் வரையில் எரிக்கப் புல்போது மானதாக இல்லை. அப்போது இருவினையாம் பாசத் தொடக்கினை எரித்தவராகிய கணம்புல்லர் தம் திருமுடியை அடுத்த விளக்காக எரித்தார். சேக்கிழார் இதனை,

முன்புதிரு விளக்குஎரிக்கும் முறையாமம் குறையாமல்
மென்புல்லும் விளக்குஎரிக்கப் போதாமை, மெய்யான
அன்புபுரி வார்அடுத்த விளக்குத்தம் திருமுடியை
என்புருக மடுத்துஎரித்தார் இருவினையின் தொடக்கு எரித்தார்.

எனச் சிறப்பித்துப் போற்றியருளினார்.

"அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்று திருவள்ளுவர் கூறியாங்கு என்புருக மடுத்து எரித்த கணம்புல்லர் நல்வினை, தீவினைகளாகிய புண்ணிய பாவங்களை - பாசங்களை எரித்தவரானார். நல்வினையும் பிறவிக்குக் காரணமாகும். நான்

புண்ணியம் செய்கின்றேன் என்ற நினைப்பு அற்றுப் புண்ணிய காரியங்களைக் கடவுளால் இது நிகழ்விக்கப் பெற்றது எனச் சிவார்ப்பணமாகச் செய்ய வேண்டும். 'எல்லாம் சிவன் செயல்' என்ற எண்ணம் உறுதிப்படுதலே உய்யும்வழி எனத் தத்துவ நெறியை உணர விரித்தருளி உபதேசம் செய்தார்கள். சேக்கிழார், இருவினையின் தொடக்கு எரித்தார் எனச் சித்தாந்தநெறிபுலப்பட அருளிய திருமொழியைச் சேக்கிழார் மற்றுமொரு திருவாக்குக் கொண்டு ஒப்பீட்டுரை அருளினார்கள்.

"குழிநிரம்பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப்பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்க"

என்னும் இளையான்குடிமாற நாயனார் புராணப் பகுதியே அது. குழி நிரம்பாத அளவே முளைத்துள்ளது கீரை. அதை மனைவியார் அமுது ஆக்கும் பொருட்டு, வேரோடு பறித்தார் மாறநாயனார். கீரை பறித்த இக்காட்சியைச் சேக்கிழார், "பாசங்களை வேரோடு களைந்தது போல இருந்தது" என சித்தாந்தக் கருத்தை உவமையாக்கியருளினார். பாசம் வேரோடு களையப்பட்டாலே சிவகதி சேர்தல் ஆகும் என்னும் இந்நெறியை மாறநாயனார் புராணத்தில் அருளிச்செய்தமை போலவே இப்புராணத்திலும் இருவினைத் தொடக்கு எரித்துச் சிவகதி சேர்ந்த சீர்ப்பாடு பேசப் படுகின்றது-இவ்வாறு இனிய - சிந்தனைக்கு நல்விருந்து நல்கும் - ஒப்பீட்டாய்வு அருளியமை அன்பர்களை நெறிப்படுத்துவதாக அமைந்தது.

தம் திருமுடியினையே விளக்காக எரித்த கணம்புல்லர்க்கு இறைவன் பெருங்கருணை புரிந்தார். சிவலோகப் பேறு பெற்று இறைவனை இனிது வணங்கி வீற்றிருந்தார் கணம்புல்லர்; திருவிளக்குப் பணிபுரிந்த இந்நாயனாரின் குருபூஜைத் திருநாள் கார்த்திகை மாதம் கார்த்திகை நாளில் அமைந்துள்ளது.

இங்ஙனம் புராண வரலாற்றினைச் சேக்கிழார் திருவாக்குக் கொண்டு சாத்திர தோத்திர நெறியோடு விளக்கி உபதேசம் நிறைவித்தார்கள். பண்டாரக்கட்டின் புறத்தே அன்பர்கள் அனைவருக்கும் இன்சுவைத் தீங்கனிச்சாறு அளித்தனர். இனிய சிந்தனை எந்தி இல்லம் ஏகினோம்.

திருவிளக்குத் திருப்பணியால் திருவாளன் கழல்சேர்ந்த
அருளாளர் நெறிசாற்றும் அருட்குருவின் தாள்போற்றி!

வாழ்க குருமணிகள்!

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் தேவார வைப்புத்தலங்களில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்துவிக்கப் பெறுகின்றன. சுக்கில கார்த்திகை-ஆயில்ய வழிபாடு19—11—89 ஞாயிற்றுகிழமையன்று கூந்தலூர் அருள்மிகு ஜம்புகாரண்யேசுவரர் திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெற்றது. இத்தலம் திருநாவுக்கரசர் சுவாமிகள் தேவாரத்தில் இடம் பெற்ற சிறப்பினது இத்தலச் சிறப்புக்களை விளக்கித் தருமை ஆதீனப் புலவர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., உரையாற்றினர். "மாகுடி, மாட்டூர், கூந்தலூர், புதுக்குடி, தக்களூர் - தேவாரப் பாடல்களும் தலச்சிறப்புக்களும்" என்ற நூல் வெளியிடப்பெற்றது.

குருவருளும் அருளுபதேசமும்

தருமைஆதீனத் திருமடத்தில் ஆங்கிலமாத முதல்ஞாயிற்றுக் கிழமை தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனைத் திருக்கூட்டம் நடைபெற்று வருகின்றது. இம்மாதம் 101 ஆவது அருளுபதேசம் 3—12—89 அன்று திருமுறைப் பாராயணத்துடன் தொடங்கி நடைபெற்றது. தருமை ஆதீனம் அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனப்பேராசிரியர் டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ., பிஎச். டி., தொல்காப்பியத்தில் சைவசித்தாந்தம் பற்றி உரை நிகழ்த்தினர்.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருத்தொண்டர் புராணத் உபதேசமாகக் காரிநாயனர், நின்றசீர் நெடுமாறநாயனர் வரலாறுகளைச் சைவ சித்தாந்தச் செந்நெறி புலப்பட விளக்கியருளினர்கள்.

காரிநாயனர் அருளிச் செய்த காரிக்கோவை அகப்பொருள் துறை அமையப் பாடியது. திருச்சிற்றம்பலக் கோவை போலத் தத்துவப்பொருள்கள் உள்உறையப் பாடியது என அருளி, இந்நூல் இப்போது கிடைக்கவில்லை என்பதையும் சுட்டியருளினர்கள். நெடுமாறர் புராண உபதேசத்தின் போது, இவர் வரலாறு திருஞானசம்பந்தர் வரலாற்றோடு ஒட்டியபான்மையைச் சுட்டிச் சேக்கிழார்நெடுமாறர் வரலாற்றில் கூறியது கூறலின்றிப் புராணம் எடுத்தோதியதை விளக்கம் செய்தருளினர்கள்.

தருமை ஆதீன அடியார்கள், அன்பர்கள், மாணவர்கள், திருச்சி மைய தருமை ஆதீனம் சைவசித்தாந்தக் கல்லூரிப் பயிற்சியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர். அடுத்து 102 ஆவது அருளுபதேசம் 7—1—90 அன்று நடைபெறும் அன்பர்கள் கலந்து கொண்டு பயன்பெறுவாராக

கடை முழுக்கு விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்திற்குச் சொந்த மான மயிலாடுதுறை வள்ளலார் கோயில் ஸ்ரீ வதான்யேசுவர சுவாமிதிருக்கோயிலில் கடைமுழுக்கை நிறைவாகக்கொண்டுபத்து நாள்கள் துலா உற்சவம் சிறப்பாக நடைபெற்றது. 15—12—89 புதன்கிழமை கடைமுழுக்கன்று தீர்த்தம் கொடுத்தருளலும், 12—11—89 ஞாயிற்றுக்கிழமை திருக்கல்யாணத் திருவிழாவும் சிறப்பாக நடைபெற்றன. அன்பர்கள் வழிபட்டும் தீர்த்தமாடியும் திருவருள் பெற்றனர்.

கார்த்திகை ஞாயிறு தீர்த்த விழா

கருங்குயில்நாதன்பேட்டையில் :

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான கருங்குயில்நாதன் பேட்டை அருள்மிகு ஆனந்தவல்லி உடனுகிய அருள்மிகு சக்திபுரீசுவரர் திருக்கோயிலிலிருந்து கார்த்திகை ஞாயிறுதோறும் சுவாமி, அம்பாளுடன் தருமபுரம்காவிரி வடகரைக்கு எழுந்தருளித் தீர்த்தம் கொடுத்தருளும் விழா சிறப்பாக நடைபெற்றது. மயிலாடுதுறை, மற்றும் சுற்றுக் கிராமங்களைச் சார்ந்த பக்தர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு தீர்த்தமாடியும் சுவாமிதரிசனம் செய்தும் பயன்பெற்றனர்.

குத்தாலத்தில் :

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான குத்தாலம் என வழங்கும் திருத்துருத்தி அருள்மிகு அரும்பன்னவனமுலையம்மை உடனுகிய அருள்மிகு சொன்னவாறு அறிவார், கார்த்திகை ஞாயிறுதோறும் அம்பிகையுடன் காவிரிக்கு எழுந்தருளித்தீர்த்தம் கொடுத்தருளும் விழா சிறப்பாக நடைபெற்றது. அன்பர்கள் தீர்த்தமாடியும் தரிசித்தும் பயன்பெற்றனர்.

திருக்கடவூரில் சங்காபிஷேகம்

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுரசுவாமி திருக்கோயிலில் கார்த்திகைச் சோம வாரநாட்களில் 1008சங்காபிஷேகம் மிகச்சிறப்பாகநடைபெற்றது. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி

வழிபாடாற்றி அன்பர்கட்குத் திருவருட்பிரசாதம் வழங்கியருளி னூர்கள்.

காவிரி முதலிய புண்ணிய தீர்த்தங்களைக் கொணர்ந்து அத்தீர்த்தத்தில் இருநூற்றைம்பதுக்கு மேற்பட்ட பொருள்களைச் சேர்த்து சங்குகளில் நிரப்பி வரிசையாக அமைத்து நடுவில் பீடத்தில் வலம்புரிச் சங்கை வைத்து வேள்வி முதலியவற்றால் பூசித்துத் தீர்த்தத்தை முறைப்படி பெருமானுக்கு அபிஷேகம் செய்வது சங்காபிஷேகம் ஆகும். இவ்வாறு திருக்கோயில்களில் சங்காபிஷேகம் செய்வதால் உலகநலம் உண்டாகும்.

ஊன நடனமும் ஞான நடனமும்

ஆனந்தக்கூத்தனின் திருவுருவில் விளங்கும் உடுக்கை ஏந்தியகை படைத்தலையும், அபயகரம் காத்தலையும், அனல் ஏந்தியகை அழித்தலையும், ஊன்றிய திருவடி மறைத்தலையும், தூக்கிய திருவடி அருளலையும் தெரிவிக்கிறது.

இப்பஞ்சகிருத்தியங்களும் பெத்தான்மாக்களாகிய பாசத்தில் உள்ள உயிர்கட்கே பொருந்தும் ஆதலின் இத்திருநடனம் ஊன நடனம் எனப்படும். இதனை,

“ தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் — ஊற்றமாய்
ஊன்றும் மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு. ”

என விளக்குகிறது உண்மை விளக்கம். இனிப்பாசங்களின் நீங்கிய முத்தான்மாக்களிடத்து இறைவன் செய்யும் அருட்செயல்களும் இந்நடனத்தாலே குறிக்கப்படும். அதனை ஞான நடனம் என்று கூறுவர்.

உடுக்கையை அசைத்தல் உயிர்களைப் பிணித்திருக்கும் மாயையை உதறுதலைக் குறிக்கும். அனல் வல்வினைகளைச் சுடுதலைக் குறிக்கும். மலத்தை மேல் எழ ஒட்டாது அமுத்தல் ஊன்றிய திருவடியின்தொழில். ஆன்மாக்களிடம் அருட்பூரணம் மேலிடச் செய்தல் தூக்கிய திருவடியின் செயல். ஆனந்தவாரிதியில் உயிர்களைத் திளைக்கச் செய்தலையே அவரது வரதம் குறிக்கும் என்றும் கூறுகிறது உண்மை விளக்கம்.

“ மாயை தனைஉதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கிஅருள் தானெடுத்து — நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்வரதம் தான் ”

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஓய்வுபெற்ற ஆசிரியர்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்

(சுக்கில ஹு மார்கழி மீ 1உ முதல் 29உ முடிய)

(16—12—89 முதல் 13—1—1990 முடிய)

சுக்கில ஹு கார்த்திகை மீ 30௳ சுக்கிரவாரம் பூச நக்ஷத்திரம் பவ கரணம் கூடிய காலத்தில் சூரிய உதயாதி நாழிகை 50 விநாடி 48க்கு துலாலக்கினத்தில் ஸ்ரீ உலக ரட்சகரான சூரிய பகவான் விருச்சிக ராசியினின்றும் தனுர்ராசி சங்கிரமணமாக தேவ தினம் பிராதகாலம் புலரும்படி விடுகின்றார் மறுதினம் ஸ்திரவாரம் மார்கழி முதல் தேதி ஷடசீதி புண்ணியகாலம். ஆலயங்களில் தனுர்மாத பூஜாரம்பம். இம்மாதம் பூராவும் சகல ஜனங்களும் அருணோதயம் முன்னதாக (காலைமணி 4½) துயில் எழுந்து சுத்தநீர் தடாகம் ஆறு, கிணறு இவைபோன்றதில் ஸ்நானம் செய்து பரிசுத்தமாக தேவாலயம் சென்று இறைவன் சந்நிதியில் உஷக் காலத்தில் ஸ்தோத்திர பாக்களால் இறைவனை பாடிப்பரவி இறைவன் திவ்விய தரிசனம் செய்துவருவதால் இறையருள் கிட்டும். மன அமைதி நிஷ்களங்க முகத்தோற்றம் நல்ல ஆரோக்கியம் இலட்சுமி கடாட்சம் செல்வம்இவை ஏற்படும் பூரண மனதில் செயல்பாடுகள் இனிது முடிந்து திருவுண்டாகும். வாழ்க்கையில்நலம் பல ஏற்படும். சங்கிரமண காலகிரகஸ்திதியின் பலனுவது உலக நாடுகளில் தொழில்வளம் பெருகும். பொருளா-தாரம் மிகும். கரிசல்மண் பயிர்கள் புன்செய்ப் பயிர்கள் விளைவு அதிகரித்துவரும். பிரஜைகளின்உழைப்புக்கு நற்பலன்வந்தெய்தும். இரும்பு உருக்காலைகளில் இயந்திர சாதன உறுப்புகள் வாழ்க்கை நவீன பொருள்கள் அதிகரித்து வரும். மற்றும் சர்க்கரை, நூல் நெசவுமாகி தம் ஆதிய அன்றாட உபயோகப் பொருள்களும் உற்பத்தி பெருகிவரும். உலகெங்கும் உள்ளதிருமடங்கள் ஆசாரிய பீடங்களில் பரமாசாரிய மகான்களாக வந்துள்ள சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் ஜெகத்குரு மகான்கள் உலகத்துக்கு அரசநீதி உதார குணப்பண்பு பழமை இலக்கிய உண்மை நீதியினைப் புதுமை சமூக வாழ்க்கைக்குத் தம் திருவாய் மலர்ந்து தூய நேர்வழி பகர்ந்தும் நூல் வெளியீடு செய்தும் அருளி செய்வார்கள். எல்லா மாந்தர்களும் சிவாசாரத்தில் திகழ ஆசியருள்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள், சிறப்பு உஷக்கால பூசைகள் நியமமாக நடந்துவரும். பக்தர்கள் சிவநேயர்கள் ஈஸ்வரபக்தியில் இருள் நீங்கியவராய் நியமம் வழுவாது சிவஞான அறிவில் திகழ்வார்கள். எல்லாப் பிரஜைகளும் விசேஷ உஷக்கால ஈஸ்வர தரிசனம் செய்து மனத்தூய்மையில் இலட்சுமி கடாக்ஷத்துடன் செவ்விய வாழ்க்கை நடத்துவர்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுப பலனாக நடக்கும். பண வருமானம் வெகுவாக வந்துகொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் செய்தொழில் உத்தியோகத்தில் அரசாங்கத்தில் கௌரவிக்கப்படுதல் ஆகும். தெய்வதரிசனம் செய்தல், நல்லோர் சான்றோர்கள் சந்திப்பு, நல்விஷய கேள்வி, மகிழ்ச்சியாகும் சம்பவங்கள் நேரும். ஓர் இயந்திர சாதனம் அனுபோக பிராப்தி யாகும். செந்நெல் பிராப்தியில் விருத்தி ஏற்படும். எல்லா நற்கிரியைகளும் சிறப்புடன் நடந்து வரும். தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். டிசம்பர் 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷப ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் பெருமதிப்பில் வந்து சேரும். வித்துவத்துவம் கலைத் துறையில் நல்ல பிரயோஜனம் வரும். அரசாங்கத்திலிருந்து நற்செய்திவரும். அடிக்கடிவெளியூர்ப்பயணம் இருப்பினும் ஆதாய கரமானதாகும். புத்திரரின் கல்வி கலை ஜீவனோபாயங்களில் அரசாங்க நன்மை ஏற்படச் செய்யும். தாம்பத்திய வாழ்வில் பிணக்கு ஏற்படினும் உடன் சகஜமயம் ஆகும். எல்லாக்காரியங் களையும் நெறியுடன் நடத்தி வரும். டிசம்பர் 27, 28, 29 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

3 மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் நற்பலன் தரும். பண வருமானம் அதிகம் தரும். அரசாங்க நன்மை ஏற்படும். சாஸ்திரம் தத்துவம் கலாசாரங்களில் பரிச்சயம் தரும். நல்லவர் ஆசான்கள் ஸ்லாகித்து ஊக்குவிப்பர். பூமியில் விருத்திபலன் தரும். எல்லா அரிய பெரிய காரியங்களும் வெற்றிகரமாகும். புத்திரிக்கு ஓர் சோக சம்பவம் காணும். தெய்வபிராத்தனை நலம் தரும். தாம்பத்திய வாழ்க்கை விருப்பு வெறுப்பின்றிச் சாதாரணமாக நடந்து வரும் டிசம்பர் 30, 31 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பண வருமானம் அரசகாரியத்திற்கு ஏற்ப வந்து சேரும். வித்துவத்துவம் கலைத் துறையில் அரசாங்கத்தில் கௌரவிக்கப்படுதல் ஆகும். பொது நலம் செய்யும். தெய்வதரிசனம் செய்தல் புண்ணிய க்ஷேத்திரம் செல்லுதல் ஆகும். ஞானமார்க்க சிந்தனை ஏற்படும். ஆய்வுகளில் புதுமை காணுதல் ஆகும். எல்லா நற்கிரியைகளும் வெற்றியாக நடந்தேறும். தாரம் புத்திரர்களுக்கு நலம் தரும். ஜனவரி 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

5 சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்ம ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பண வருமானம்வரும். வித்துவத்துவம் கலைத்துறையில் சிறப்புத் தரும். நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு, நல்விஷய உரையாடல் மகிழ்ச்சி தரும். பூமியில் இயந்திரங்களில் விருத்தி பலன் ஏற்படும். முதியவர் அல்லது நெருங்கிய தொடர்புடையவர் மனஸ்தாபத் துடன் விலகி இருந்துகொள்வர். பின் ஓர் சௌகரியத்தில் கூடுவர். ஸ்ரீதுர்க்காம்பிகைக்கு அருச்சனைசெய்துவரச்சகலகாரியங் களிலும் ஜெயபிராப்தியை உண்டுபண்ணும். தாரம்புத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். ஜனவரி 3, 4தேதிகள் சந்திராஷ்டமம் ஞாயிறு, திங்கள் சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் சுப பலன்தரும், பணவருமானம் அதிகம் தரும். ஓர் நவீன பொருள் வாங்குதல் ஆகும். வித்துவத் துவம் கலைத்துறையில் எழுத்துமூலம் விஷயங்களில் விசேஷ நன்மைகளை ஏற்படுத்தும். அரசாங்கத்திலிருந்து நற்செய்திவரும். எல்லாக்காரியங்களையும் திடசித்தமாகச் செய்விக்கும். ஸ்ரீதுர்க்கா அம்பிகைக்கு அருச்சனை செய்யக் குடும்பத்தினருக்கு சௌக்கிய பலன்தரும். ஜனவரி 5, 6 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் சுபபலனைத் தரும். பணவருமானம் மூன்று வகையில் வரும். நல்ல இரத்தின பூஷணம் அணிக்கும். தெய்வ தரிசனம் செய்தல், நல்லோர் அருள் தருதல், முதியவர் குருமார்களிடம் ஆசிபெறுதல் ஆகும். ஓர் இயந்திர சாதனம் கையாளுதல் ஆகும். செந்நெல் பிராப்தியில் விருத்திபலன் தரும் வாக்குறுதிப்படி செயல்படுதல் ஆகும். லேவா தேவிகளில் நல்ல பலிதம் தரும். தாரம் புத்திரர்களின் நலம் நன்ருக இருந்து வரும். ஜனவரி 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். பண வருமானம் மூன்று வகையில் வந்துசேரும். வித்துவத்துவம் கலைத் துறையில் செய்தொழில் உத்தியோகத்தில் அரசாங்கத்தில் நன்மதிப்பும் உயர்வும்தரும். பூமி பிராப்தியில் நற்பலன் ஏற்படும். பொதுநலம் தர்மகாரியங்கள் செய்விக்கும். நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு நல்விஷய பேச்சுக்கள் சம்பவிக்கும். சமூக நலத்திட்டம் வகுத்தலில் மேலிடத்திய அனுகூலம் ஏற்படும். தாரம் புத்திரர் களுக்கு சௌகரியம் தரும். ஜனவரி 9, 10, தேதிகள் சந்திராஷ் டமம். சனி, ஞாயிறு சுபம்.

9. தனுசு : மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் அதிகம் வரும். சகோதரர் புத்திரர்களின் நலனில் செலவினமும் ஏற்படும். வீடுவாகன பிராப்தியில் நல்லசௌகரியம் ஏற்படுத்திவரும். தெய்வபக்தி மிகும். நல்ல கருத்துக்கள் கவிதை விளம்பர நூல்வெளியீடுகளில் ஊக்க சிந்தனையாகும். நல்லோர் சான்றோர் வருகைதருதல், நல்விஷயஉரையாடல் மகிழ்ச்சியாகும். தாம்பத்திய வாழ்க்கை தான தர்மத்துடன் நடந்துவரும். ஜனவரி 12, 13, தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகர ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானங்கள் வந்துகொண்டிருக்கும். வித்தியாவியாபாராதி கலைத்துறையில் முன்னேற்ற ஸ்திதியும் விளம்பரம் முதலீடுகளும் ஆகும். பூமி இயந்திர சாதனங்களில் நற்பலன் வரும். வாகன சுகம் திருப்தியளிக்கும். புத்திரிக்கு அம்மை நலிவு ஏற்படுதல் காணும். ஸ்ரீதுர்க்காம்பிகைக்கு அருச்சனை செய்யவும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். டிசம்பர் 18, 19 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்பராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பணவருமானம் மூன்று வகையில் வந்து சேரும். வித்துவத்துவம் கலைத்துறையில் அரசாங்கச் செல்வாக்கு உண்டாகும். இயந்திர வாகனங்களில் முதல் முடங்கச் செய்யும். பூமியில் விருத்திபலன்தரும். எல்லாக் காரியங்களையும் திறம்பட உறுதிபடுத்திச் செய்யும். புத்திரருக்கு அரசு உபகாரவளிக்கும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வ பக்தியில் தான தர்மத்துடன் நடந்துவரும். டிசம்பர் 20, 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பணவருமானம் வந்துகொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் ஜீவனோபாயம் உத்தியோகத்தில் அரசு நன்மைகள் ஏற்படச் செய்யும் எல்லாக்காரியங்களையும் மதிநுட்பத்தில் சிறப்பாக நடத்தச் செய்யும். பூர்வப்பொருள் அல்லது முன்பு வரவேண்டியதன் பிராப்தியில் ஓரளவுசெலவுடன் மதிப்பாகக் கைக்குவரச்செய்யும். தாரம் புத்திரர்களுக்கு சௌகரியபலன்தரும். டிசம்பர் 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

ஸ்ரீல ஸ்ரீ சிவஞான தேசிகரின்
திருவருட்பாத் திரட்டுச் சிந்தனை :

பண்டார சாத்திரங்கள் !

ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி திருவருட்பா

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ., பி. எட்.,
தருமபுரம்..

முன்னுரை :

வைத்தீசுவரன் கோயில் என வழங்கும் புள்ளிருக்கு வேளூர் சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலங்களுள்ஒன்று. திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்தின் அருளாட்சியில் விளங்கும் சிறப்பினது. இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் ஒன்றும் திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகம் இரண்டும் உண்டு. 'சம்பாதி, சடாயு' என்னும் பறவை வடிவாய் இருந்த இருவரும் வழிபட்ட தலம். புள்+இருக்கு + வேள் + ஊர் என்னும் சொற்களின் புணர்ச்சியே புள்ளிருக்கு வேளூர் என ஆகிறது. புள்-பறவை. இருக்கு - வேதம். வேள்-முருகன், ஊர்-ஊர்ந்து செல்வோனாகிய சூரியன். இவர்கள் வழிபட்டுப் பேறுபெற்றமையால் புள்ளிருக்கு வேளூர் எனப்பெற்றது. மேலும் அங்காரகன் (செவ்வாய்) பூசித்துப் பேறு பெற்ற தலமும் ஆகும் இது. இது பற்றி இக்கோயிலுக்குச்செவ்வாய்க்கிழமைவழிபாட்டுக்குகந்தநாட்களுள்சிறப்பாகச் சொல்லப்படுகின்றது. இத்தலத்துப் பெருமான் வைத்தியநாதர். ஆதலால் தலம் வைத்தீசுவரன்கோயில் என வழங்கப்படுகின்றது. ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி கிருத்திகை அபிஷேகம் கொண்டருளி அன்பர்கட்கு அருள் வழங்குகின்றார். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் சிறப்புக்கள் பல கொண்டது இத்தலம். இத்தலத்து ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமியைத் துதித்துத்

தருமை ஆதீனம் 10 ஆவது குருமகாசந்நிதானம் பாடியருளிய திருவருட்பாப் பாடல்கள் இக்கட்டுரையில் ஒருவாறு சிந்திக்கப் பெறுகின்றன.

நூற்குறிப்பு :

ஸ்ரீசெல்வமுத்துக்குமார சுவாமி திருவருட்பா 10 பாடல்கள் கொண்டது. தலச்சிறப்புக்கள், முருகப்பெருமான் அருள் வழங்கும் சிறப்பு, சைவசித்தாந்தக் கருத்துக்கள் முதலிய அரிய பொருட் சிறப்புக் கொண்டது. இச்சிறுநூலின் ஒவ்வொரு பாடலும்,

"முக்கண் குருக்கள் குருவே
முத்தர் குருவே யோக சித்தர் குருவேபால
முத்துக் குமார குருவே"

என்ற நிறைவுடையதாக அமைந்துள்ளது. முருகப்பெருமான் முக்கண்ணனும் சிவபெருமானுக்கு அருமறைப் பொருள் உரைத்தவர். முத்தர்க்கும் சித்தர்க்கும் குருவானவர்; பாலமுத்துக்குமரன் என்ற திருநாமம் உடையவர் என்பது இத்தொடர்களின் பொருள்.

தலச் சிறப்புக்கள் :

(1) வேதம் வழிபட்டது : வேதம் வழிபட்டது என்பதைத் தலப்பெயரில் அமைந்துள்ள இருக்கு என்னும் சொல்சுட்டும். வேதமும், ஆகமமும் முழங்குவது இவ்வூர் என்றும் வேதம் நான்கும் வழிபட்ட பெருமான் இத்தலத்து எழுந்தருளியுள்ளான் என்றும் ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் குறித்தருள்கின்றார்கள். "முதுமறைகள் ஆகமங்கள் முழங்கு புள்ளூரன்" என்பதும் (பாடல் 1.) "முன்னம் மறை நாலும் வந்துன்னு புள்ளூரன்" என்பதும் (பாடல் 4.) இவ் வரலாற்றைக் குறிக்கும் பகுதிகள்.

(2) இராமன் வழிபட்டது : சீதாபிராட்டியை இராவணன் கவர்ந்து சென்றபோது ஆகாயத்தில் சடாயு அவனுடன் போர் செய்தான். சடாயுவும் தன் உயிர் நீங்கும் முன் இராமபிரானுக்கு இச்செய்தியை அறிவித்து உயிர் நீத்தான். இதனை "மெய் சொல்லா இராவணனை மேலோடி ஈடழித்துப் பொய் சொல்லாது உயிர் போனான் புள்ளிருக்கு வேளூரே" எனவும், "ஆகாயம் தேரோடும் இராவணனை அமரின்கண் போகாமே பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே" எனவும் பிறவாறும் வரும் திருஞானசம்பந்தர் திருவாக்கால் அறியலாம். போரில் இறந்த ஜடாயுவுக்கு, இராமபிரான் இத்தலத்தில் ஈமக் கிரியை செய்தார் என்றும் அதன் அடையாளமாகவே 'ஜடாயு குண்டம்' திருக்கோயிலில் அமைந்துள்ளது என்றும் கூறப்படுகின்றது.

மேலும், இராமபிரான் தம்பி இலக்குமணனுடனும், சீதையுடனும் தண்டகாருணியத்தில் வசிக்கும் நாட்களில் இங்கு வந்து தம் திருப்பெயரால் தீர்த்தம் உண்டாக்கி அதில் மூழ்கித் தம் முன்னோர்க்குத் தருப்பணம் முதலியவைகளைச் செய்தார் என்று புள்ளிருக்கு வேளூர்த் தலபுராணம் இராம தீர்த்தச் சருக்கம் கூறுகின்றது.

இத்தகையவாய தல வரலாற்றுச் செய்திகளை எல்லாம் திருவுளத்துக் கொண்ட குருமூர்த்திகள் "முந்து இராமன் பணிய வந்து புள்ளூரில் வாழ் முக்கட்குருக்கள் குருவே" எனக் குறித்தருளினார்கள்.

(3) பவரோக வைத்தியநாதர் : திருச்சாந்துருண்டையாலும் திருநீற்றாலும் பிணி, வறுமை, மரணம், ஜனனம் என்னும் நோய்தீர்ப்பவர் வைத்தியநாதர். "பேர் ஆயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மான்; மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீரா நோய் தீர்த்து அருள்பவர்" - இங்ஙனம் அப்பரடிகளால் துதி செய்யப் பெற்றவர். அவர் நோய் தீர்த்தருளும் மாண்பை,

> " மாசமுறை தேவர்க்கும் மனிதர்க்கும் முனிவர்க்கும்
> மண்ணுருண்டை யாம்நீற்றினால்
> வறுமையொடு தேகத்தில் வருபிணிகள் எல்லாமும்
> மரண சனனங்களாகும்
> மோகநோயும் தவிர அருள் உதவும் புள்ளூர " பாடல் (9)

என ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய சுவாமிகள் குறித்தருளினார்கள். "அருமருந்தே" என்றும் " முன்னைவினை தீர்த்தருளும் மன்னவனே" (பாடல் 2) என்றும் இந்நூலில் பவரோக வயித்தியநாதர் பெருமையைச் சுட்டியருளினார்கள்.

முருகன் வடிவழகும், அருளழகும் :

சந்திரனைப் போன்றமுகம்; அம்முகம் பெற்ற தாயின் கருணையையும் அல்லவா நினைப்பிக்கிறது! முருகனின் கருணை நோக்கு மல வெப்பத்தை நீக்கும் மழை! உண்மை, அறிவு, ஆனந்தம் இவை அவன் வடிவம்; புன்முறுவல் பூத்த திருவடிவு! முருகப் பெருமானே! அடியேன் முன் சின் முத்திரையுடன் தோன்றி அருள் புரிக என வேண்டுகிறார்; திருவடிவை என் தலை மேல் வைத்து அருள்க. உன் அருளால் உலகத் துன்பம் நீங்கும்; வற்றாத பேரின்பம் கிடைக்கும் என வேண்டும் பாடல் (எண் 4) முருகப் பெருமான் வடிவழகையும் அருளழகையும் விளக்கிக் காட்டுவது.

பன்னிரு செவி :

முகம் ஆறு; எனில் செவிகள் பன்னிரண்டுதானே! பன்னிரண்டு செவிகள் என்னசெய்யும்? மனிதநிலையில் இருசெவிகளும் ஒன்றைத் தான் கேட்கும். ஆனால் முருகப்பெருமான் செவிகள் என்னென்ன செய்கின்றன?

"அன்னை சொற்கு ஒருசெவி; ஐயர் சொற்கு ஒருசெவி;
அம்மான் துதிக்கு ஒருசெவி;
ஆனை சொற்கு ஒருசெவி; வீரர் சொற்கு ஒருசெவி;
அயன் துதிக்கு ஒருசெவி; விணோர்
மன்னர் சொற்கு ஒருசெவி; வள்ளி சொற்கு ஒருசெவி;
வான்வனிதை சொற்கு ஒருசெவி;
மறை துதிக்கு ஒருசெவி; அடியர் சொற்கு ஒருசெவி;
வல் அசுரர் சொற்கு ஒருசெவி." (பாடல் 4.)

என்று பட்டியல் இட்டுக் காட்டுகிறார்! அம்மட்டோ! "பன்னிரு செவிகளையும் இப்படிக் கொடுத்து விட்டாய்! என் சொல்லை எந்தச் செவியால் கேட்பாய்? நீ அடியேன் சொல் கேளாமல் பராமுகமாய் இருந்தால் பாவியேன் மெலிவு, மற்றும் குறைகளை யார் செவியில் ஏற்றுவேன்? படுதுயர்களை எப்படி நீக்கிக் கொள்வேன்?" - என்று பெருமானை வேண்டிக் கொள்ளும் அருட்பாடல் அழகிது! அழகிது!

விளையாட ஓடிவருவாய் :

ஸ்ரீ செல்வமுத்துக்குமரப்பெருமானே! நிலவைப்போன்ற முகம் ஆட, இருசெவிகளிலும் அமைந்த நவமணிகள் பதித்த குண்டலங்கள் ஆட, தாமரை போன்ற திருவிழிகள் ஆட, கருணைமேனி ஆட, புயங்களில் அணிந்த தோள் வளைகளும் ஆட, கடப்ப மலர்மாலையும் ஆட, பாதச் சிலம்பாட, வேலாட, மயிலாட என் கண் முன் ஓடி வருவாய் என இறையருள் வேண்டும் முதற்பாடல் உயிர்களின் ஈடேற்றத்திற்கு உதவும் இறைவன் அருளாடலைச் சிறப்பிக்கிறது.

ஸ்ரீ முத்துக்குமரப்பெருமான் அடியார் உள்ளம் என்னும் கூட்டத்தில் விளையாடுகிறான்; இறைவனின் சடைக்காடு, கங்கை உமை என்ற அன்னையரின் திருவுதரம், பிரமனின் கண்கள், இந்திரன் முதலிய தேவர்களின் தலை, வேதங்களின் முகங்கள், திருமாலின் புயங்கள், மயிலின் முதுகு, பரங்குன்றம், பழனி, திருச்செந்தூர் போன்ற தலங்கள் முருகப் பெருமான் விளையாடும் களங்கள் என்கிறது ஒரு திருப்பாடல். (பாடல் 3.)

குருமணிகளின் வேண்டுகோள் :

1. என் கண்முன் நீ விளையாட ஓடி வருவாய்.

2. உன்னையே பாடி நின்று ஆடி இருகண்களின் நீர் ஓட, உரோமம்சிலிர்ப்ப, உள்ளம்கரைந்து, உருக, அடியேனின் உல்லாசம் ஆவது என்றோ.

3. உனது உபய பரிபுர பதாம் புயங்கள் .... என்னுடைய கள்ள இதயத்திலே கூசாமல் என்று வருமோ?

4. படுதுயர் களைக.

5. உன் அடியை என் முடியில் வைத்தருள்; உலக வாதனை நீக்குக. பேரின்பம் நல்குக.

6. எந்நேரமும் கண்டுமகிழ அருள் புரிக.

7. மோக நோயும் பிறநோய்களும் தவிர அருள்க.

8. கற்ற மெய்யடியார்க்குக் குற்றேவல் செய்ய அருள்க.

இங்ஙனம் பாடல்கள் தோறும் முத்துக்குமரப் பெருமான் திருவருள் இறைஞ்சுவதாக அமைந்த அருட்பாடல்கள் பாராயணம் செய்ய உகந்ததனவாக உள்ளன.

கள்ள மனம் :

மனத்தில் வஞ்சகம், பொய், வாழ்க்கையில் கபட நாடகம், கொலை, களவு, காமம் எல்லாம் கொள்ளை கொள்ளும் என் இதயம் - இது மனிதனின் நிலை. இத்தகைய கள்ள இதயத்தில் வர நீ கூசுவாய்! உன் பாதாம் புயங்கள் இந்தமனத்தில் குடிகொள்ளுமா? இப்படி மனித இழிவுநிலையைப் பேசிக்காட்டுகிறார்கள் குருமணிகள்.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் பாடியருளிய,

" வாக்கிலுரை பொய்யே; மனம் நினைப்பதும் கவடே!
ஆக்கைதினம் செய்வது அகிர்த்தியமே — நோக்கில்
திரிவிதமும் இப்படி நீ செய்வித்தால் முத்தி
தரும்விதமெள் சொக்கநா தா. "

என்ற சொக்கநாத வெண்பாவை நினைப்பிக்கும் வகையில்,

" குடிகொண்ட வஞ்சகம் பொய் கபடநாடகம்
கொலைகளவு காமமெல்லாம்
கொள்ளை கொள்ளும் என்னுடைய கள்ள இதயத்தில்
கூசாமல் என்று வருமோ. "

எனப் பத்தாவது குருமூர்த்திகள் வேண்டியருள்கின்றார்கள்.

சைவ சித்தாந்தச் செறிவு :

சித்தாந்த தத்துவங்கள் பாடல்தோறும் இந்நூலில் காணப்படுகின்றன. குறிப்பாகச் சில கூறலாம். முருகன் சிவனின் வேறல்லன் என்பது முடிபு. " நமது சத்தி அறுமுகன் " என்பது இறைவாக்கு. சிவனே முந்தொழில் இயற்றும் முதல்வன். முருகனும் அவனே. இதனை,

" பாகம்வரு நிமிடத்தில் அகிலசகம் எல்லாம்
படைத்துத் திதித்து அழித்துப்
பரமசக சானந்த சலதி விளையாடவரு
பரமசிவமாம் உன்னை "

என்று குருமணிகள் தெளிவுபடுத்தி யருளிச்செய்துள்ளார்கள்.

மகேசன், ருத்ரன், மால், அயன் என்ற உருவங்கள் நான்கும் முருகனே! சிவம், சத்தி, நாதம், விந்துஎன்ற அருவங்களும்அவனே! உலகு எங்கும் உள்ள உள்கரணங்களும் அவனே! போகங்களும் அவனே! மண், புனல், அனல், வாயு, வான் ஆகிய ஐம்பெரும் பூதங்களும் அவனே! சந்திரன், சூரியன் அவனே! அருவ உயிர் களும் அவனே! இன்பமும் அவன். துன்பமும் அவன் - இங்ஙனம் எல்லாம் ஸ்ரீ முத்துக்குமரனே என்னும் கருத்தமைந்த,

" உருவங்கள் நாலும்நீ அருவங்கள் நாலும்நீ
உபயமொன் றுனதுவும்நீ
உலகங்கள் எங்கும்வரு கரணங்கள் யாவும்நீ
உருவங்கள் எல்லாமும்நீ
வருபெரிய போகங்கள் யாவும்நீ மண்ணும்நீ
வாரிமுத லொண்புனலும்நீ
வடவைமுத லனலும்நீ வாயுநீ வானும்நீ
மதியும்நீ மார்த்தாண்டன்நீ
அருவங்க ளாமுயிர்கள் யாவும்நீ இன்பத்துள்
பரவதுவும்நீ என்பதை
அடியன்எந் நேரமுங் கண்டுகண்டுல்லாச
ஆனந்தம் ஆவதென்றோ

முருகசரவணபவா பெரியபுள்ளூரனே
முக்கட்குருக்கள் குருவே
முத்தர்குரு வேயோக சித்தர்குரு வேபால
முத்துக் குமார குருவே." (பாடல் - 8.)

இப்பாடல் தோத்திர சாத்திரக் கருத்துக்கள் பலவற்றையும் உட் கொண்டது. இறைவனின் அட்ட மூர்த்தங்களை எடுத்தியம்புவது.

" உன்புவனம் என்புவனம் உன்வடிவம் என்வடிவம்
உன்பொறிகள் எனதுபொறிகள்
உன்கரணம் என்கரணம் உன்மொழிகள் என்மொழிகள்
உன்விடயம் என்விடயமென்று
அன்பினுடனின்று எனையுள் அன்பர்பெறும் இன்பவடி
வாகஅருள் ஏகமுதலே
அண்டருறை யண்டநவ கண்டமும் உவந்தருளும்
அம்பிகைத்ரி யம்பகரிருந்து
இன்பவமு தேவருக எங்கள்மக னேவருக
எங்களுயிரே வருகஇங்கு
எங்கள்தன மேவருக எங்களரசே வருக
எங்கண்மணி வருகஎனவே
முன்புவந் தவருடன் விளையாடு புள்ளூர
முக்கட்குருக்கள் குருவே
முத்தர்குருவே யோகசித்தர் குருவேபால
முத்துக் குமார குருவே." (பாடல் - 5.)

என்னும் பாடல் அடியார் பெறும் சாருபநிலையைப் புலப்படுத்துவ தாக அமைந்துள்ளது.

கடாட்சம் வைத்தருள் :

மிகச் சிறிய அளவை எள் அளவு என்பர். எள்ளை ஆயிரம் கூறு ஆக்கி அதில்ஒருபங்கு பக்திசெலுத்தினாலே இறைவன் அருள்வான்; உயர் பதவிகளைத் தருவான்; நல்ல செல்வம் தருவான் - இப்படிச் சொல்கிறோம்! கேட்கிறோம். ஆனாலும் அடியாரிடம் அன்பு செலுத் தாத கல்ல மனம் கொண்டோர் உலகத்தில் இருக்கின்றார்களே! - என்று குருமூர்த்திகள் மனம் வேதனைப் பட்டார்கள்.

" சற்றமெய் யடியவர்கள் குற்றேவல் செய்யக்
கடாட்சம் வைத்தருள் வேலவா "

எனநிறைவாக வேண்டினார்கள். அடியார்க்குக் குற்றேவல்செய்வது ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டல்லவா? இன்பம் எய்தும் எளிய இனிய வழியன்றோ இஃது! இதுவும் இறை அருளாலே அன்றோ நிகழும்.

" அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே "

என்றார் தாயுமானவர்.

" செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே "

என்பது சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரம். "மாலற நேயம் மலிந்தவர்" என்று ஸ்ரீ மெய்கண்டார் கூறியதையே 'சற்ற மெய், அடியார்' எனக் குருமூர்த்திகள் குறித்தருளி, அருளாளர் பலரும் வேண்டிக் கொண்டவாறே அடியார்க்கு அடியாராகிக் குற்றேவல் திறம்புரிய வேண்டியதன் இன்றியமையாமை அருளினார்கள்.

நிறைவுரை :

ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி திருவருட்பா சைவ சித்தாந்த சாத்திரக் கருத்துக்களும், தோத்திர நூற்கருத்துக்களும் அமைந்து பக்தர்கள் அனைவரும் பாராயணம் செய்தற்குரிய இனிய பாராயண நூல். சந்தப் பாடல்களாக அமைந்திருப்பதால் உகிய ஓசையுடன் ஓதலாம். எளிதில் மனப்பாடம் ஆகக் கூடிய பாடல்கள். வடசொற்களின் அளவு, மிகுதியாக இருப்பினும் சந்தத்திற்கு அவை பெரிதும் துணை செய்கின்றன. பக்தர்கள் ஓதி நலம் பெறுவார்களாக.

உ

சிவமயம்

மார்கழி மாதச் சிறப்பு நாட்கள்

16—12—89 சனி, ஷடசீதி புண்ணியகாலம், தனுர் மாத பூஜாரம்பம், திருவையாறு மாதப் பிறப்பு தீர்த்தம். வைசிரா.

19—12—89 செவ்வாய், திஸ்ரோஷ்டகா.

20—12—89 புதன், காளாஷ்டமி, அஷ்டமி பிரதக்ஷிணம். இயற்பகை நாயனார் குருபூஜை.

23—12—89 சனி, மானக்கஞ்சாற நாயனார் குருபூஜை.

25—12—89 திங்கள், பிரதோஷம்.

26—12—89 செவ்வாய், மாத சிவராத்திரி.

27—12—89 புதன், சர்வ அமாவாசை, ஸ்ரீஹனுமந்த ஜயந்தி.

28—12—89 வியாழன், கெர்ப்போட்டாரம்பம் 54-02. சாக்கிய நாயனார் குருபூஜை

30—12—89 சனி, சிரவண விரதம்.

31—12—89 ஞாயிறு, சதுர்த்தி விரதம்.

1—1—90 திங்கள், ஆங்கில வருடப் பிறப்பு, வேளூர், திருவையாறு, திருக்கடவூர், சீகாழி, சிதம்பரம், உத்தரகோசமங்கை முதலிய தலங்களில் திருவெம்பாவை உற்சவ ஆரம்பம்.

2—1—90 செவ்வாய், தனுர்வியதீபாதம். சஷ்டி விரதம்.

4—1—90 வியாழன், வாயிலார் நாயனார் குருபூஜை.

6—1—90 சனி, தருமை ஆதீனம் 11 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள் குருபூஜை.

7—1—90 ஞாயிறு, கிருத்திகை விரதம், வேளூர் கிருத்திகை. தருமை ஸ்ரீ சண்முகர் அபிஷேகம். சர்வபீஷ்மபாயபத வைகுண்ட ஏகாதசி. ரைவதமன்வாதி.

8—1—90 திங்கள், சோம பிரதோஷம்.

9—1—90 செவ்வாய், இரவு ஸ்ரீ நடராஜர் அபிஷேகம்.

10—1—90 புதன், ஆருத்ராதரிசனம். பௌர்ணமி விரத பூஜையில் பசு நெய் அபிஷேகம். கெர்ப்போட்ட நிவிர்த்தி 56 - 04. வடசாவித்திரி விரதம். சடையனார் குருபூஜை.

11—1—90 வியாழன், வைசிரா.

13—1—90 சனி, ஆயில்யவிழா. போகிப் பண்டிகை. தருமை ஆதீனம் 2 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவசதேசிக சுவாமிகள் குருபூஜை.

GNANASAMBANDAM
Regd. No. TN / M. M. 1
வெளிநாடு Regd. No. TN / M. M. 4

சந்தாதாரர்களுக்கு ஓர் அறிவிப்பு!

திருத்தருமை ஆதீனத்திலிருந்து திங்கள் தோறும் மலர்ந்து செந்தமிழ் மணமும், சிவமணமும் பரப்பி, சிவஞானத்தேன் வழங்கிக் கற்போர் கருத்தை வளர்த்துவருவது ஞானசம்பந்தம். 48 ஆண்டுகள் நிறைவு பெறுகிறது. 49 ஆவது மலர் ஆண்டுக் கட்டணத்தை உடன் செலுத்தக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

சந்தாதாரர்கள்தொடர்ந்து ஆண்டுக்கட்டணம் செலுத்தியும், புதிய சந்தாதாரர்களாகச் சேரவிரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு ஆண்டுக் கட்டணம் அனுப்பியும் சந்தாதாரர்கள் சந்தாவை உரிய காலத்தில் செலுத்தியும் உதவி புரிந்து உயர்வு பெறுவார்களாக. வேலை மிகுதியினாலோ அல்லது மறதியினாலோ ஆண்டுச் சந்தா செலுத்துவதில் தடை ஏற்படலாம். தடையில்லாமல் ஞானசம்பந்தம் பெற வாய்ப்பு அளிக்கும் முறையில் ஆயுள் சந்தா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆயுள் சந்தா அறிவிப்புச் செய்த 19—2—1972 முதல் இன்றுவரையில் 1296 அன்பர்கள் ஆயுள் சந்தா செலுத்தியுள்ளனர். ஆயுள் சந்தா செலுத்தினால் அவர்களது வாரிசுகளும் ஞானசம்பந்தம் பெற வசதி செய்து தரப்படும். மேலும் தமது ஆயுள்சந்தாவை மற்றவர்களுக்கோ கல்வி, அறநிறுவனங்களுக்கோ மாற்றிக் கொடுக்க விரும்பினால் அதற்குரிய ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா		ஆயுள் சந்தா	
உள்நாடு	ரூ. 20—00	உள்நாடு	ரூ. 200—00
சிலோன் உள்பட		சிலோன் உள்பட	
வெளிநாடு	ரூ. 60—00	வெளிநாடு	ரூ. 600—00

தனிப் பிரதி விலை ரூ. 1—75

செயலாளர், ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மயிலாடுதுறை 609 001,
தஞ்சை மாவட்டம்.

குறிப்பு :- ஆயுள்சந்தா தொகை அனுப்புவோர் "ஞானசம்பந்தம் திங்கள் இதழ்" என்கிற பெயருக்கு டிராப்ட் எடுத்து அனுப்பக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

Printed & Published by V. Ramaiah Pillai Manager, Dharmapuram, the Gnanasambandam Press, Dharmapuram, Mayiladuthurai 10-12-89.